2020 - இதழ் 02 இலவசம்

## மாசி - 2020

# உள்ளான மனிதன்

## மென்பிரதி

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

gtachurch.ca

# உள்ளான மனிதன்

மாதாந்த சஞ்சிகை - இலவசம் 2020 - இதழ் 02

## இயேசு சொன்னார்:

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

# கிறேஸ் (ற்)ரபனக்கல்

## வெளியீடு

SCARBOROUGH, ONTARIO, CANADA ☎ 416.613.2909
(f)பின்ச் / மிட்லான்ட் சந்திப்புக்கு அருகில்

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

**2020 - இதழ் 02**


## 4 வாருங்கள் மிஸ்பாவிற்கு

எபினேசர் என்றால் அதற்கு இம்மட்டும் காத்தார் என்பது பொருள். இம்மட்டும் காத்தவர் தொடர்ந்து காப்பவராயுள்ளார். எபினேசராகிய தேவனிடத்தில் சேரும்படி இஸ்ரவேலர் மிஸ்பாவுக்கு வாந்தார்கள்.

## 6 கருப்பொருளை கவனியுங்கள்

ஆவிக்குரிய நோய்களின் (ஆன்மீக நோய்கள்) அறிகுறிகள் தென்படும் போது, எங்களை வழிநடத்த நியமிக்கப்பட்டவர்கள், அதை சம்மந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்க வேண்டியது அவர் கள்மேல் விழுந்த கடமை.

## 12 பிரசங்கக் குறிப்புகள்

நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்; இக்கட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம். கர்த்தர் அவர்களுக்கு உதவிசெய்து, அவர்களை விடுவிப்பார்

## 14 புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.


கிரேஸ் (ற்)ரபனக்கல்


**PLACE OF WORSHIP**
210 Silver Star Blvd., Unit #807
Scarborough, ON M1V 5J9, Canada

**MAILING ADDRESS**
7700 Markham Road, P.O. Box 3052
Markham, ON L3S 4T1, Canada

☎ 416.613.2909

info@gtachurch.ca


gtachurch.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி 14ம் பக்கத்திலிருந்து...


**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**
... மாசி 2, 3, 4, 9, 19, 21, 25

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**
... மாசி 1, 2, 3, 4, 15, 16, 20, 21, 25

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி**
... மாசி 2, 13, 15, 18, 21, 24

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**
... மாசி 3, 9, 13, 15, 16, 19, 20

**மேன்மைக்காக அழைக்கப்பட்டோம்**
... மாசி 1, 7, 8, 13, 16, 19, 25

**தேசத்தின் நன்மை பெருகும்படி**
... மாசி 10, 11, 12

**துதியும் ஜெபமும்**
... மாசி 4, 5, 12

**தேவனுக்கு பிரியமான வாழ்க்கை**
... மாசி 5, 6, 7, 12, 18, 20, 22

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**
... மாசி 8, 9, 11, 12 , 13, 17, 18

**பொறுமையோடு காத்திருங்கள்**
... மாசி 3, 8, 11, 12, 13, 15, 17, 21, 27, 29

**தேவ நீதி வெளிப்படும்**
... மாசி 3, 11

**கிறிஸ்துவின் பாடுகளின் தியானத்தின் பலன்கள்**
... மாசி 5, 6, 7 , 26, 28, 29

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**
... மாசி 9, 13, 18, 20, 22, 23

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**
... மாசி 13, 23, 25, 27, 29


gtachurch.ca

# வாருங்கள் மிஸ்பாவிற்கு

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

சாமுவேலின் நாட்களிலே நடந்த நிகழ்வுகளை சற்று எண்ணிப்பார்ப்போமானால் அது பிரயோசனமுள்ளதாயிருக்கும். இஸ்ரவேலர் தேவனையும் தேவ நியமங்களையும் அறிந்திருந்தார்கள். அவை பல தலைமுறையாக அவர்களுக்குப் போதிக்கப்பட்டு வந்தவையே. ஆயினும் காலப் போக்கில் தேவனைக் கனம் பண்ணாமல், நிர்விசாரமுள்ளவர்களாய் வாழத்தொடங்கினார்கள். இவை ஒரு இராப்பொழுதில் நடந்தவையல்ல. பல நாட்களாக, மாதங்களாக, வருடங்களாக அவர்களது வாழ்வு தேவனைவிட்டு விலகிப்போனது. அவ்வாழ்க்கையிலே அவர்கள் பழகிப்போயிருந்தார்கள்.

அவர்களது இருதயம் கடினப்பட்டு, துணிகரமாய் தேவனுக்குத் துரோகமிழைத்தனர். ஆலயத்திலுள்ள ஆசாரியரும் துரோகமிழைத்தனர். எங்கும் சீர்கேடு காணப்பட்டது. தங்கள் அரணான, பெலனாகிய தேவனை விட்டுவிலகிப் போனார்கள்.

சிறுமைப்படத் தொடங்கினார்கள். பொருள் அழிவையும் வீணான உயிரழிவையும் கண்டார்கள். எதிரிகளினால் (பெலிஸ்தரினால்) நெருக்கப்பட்டார்கள். நிம்மதி இழந்தார்கள். தேவன் தம்மோடு இல்லை என்பதை கண்டுகொண்டார்கள். தமது வழிகள் தேவனுடையவையல்ல என்பதை உணர்ந்தார்கள்.

அந்நாட்களில் இஸ்ரவேல் குடும்பத்தாரெல்லாரும் கர்த்தரை நினைத்து, புலம்பிக்கொண்டிருந்தார்கள். விடுவிப்பார் யாருமில்லை. தேவனோடு செய்திருந்த உடன்படிக்கையை உடைத்துப்போட்டவர்களாய் தேவனுக்குத் தூரமாயிருந்தார்கள்.

அப்பொழுது தீர்க்கதரிசியான சாமுவேல் இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரையும் நோக்கி: நீங்கள் உங்கள் முழுஇருதயத்தோடும் கர்த்தரிடத்தில் திரும்புகிறவர்களானால், அந்நிய தேவர்களையும் அஸ்தரோத்தையும் உங்கள் நடுவிலிருந்து விலக்கி, உங்கள் இருதயத்தைக் கர்த்தருக்கு நேராக்கி, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்யுங்கள். அப்பொழுது அவர் உங்களைப் பெலிஸ்தருடைய கைக்கு நீங்கலாக்கி விடுவார் என்றான்.

அசுத்தமானதை உங்கள் நடுவிலிருந்தும் உங்கள் வீட்டிலிருந்தும் நீக்கிப்போடுங்கள். உங்கள் இருதயத்தைக் கர்த்தருக்கு நேராக்குங்கள். கர்த்தர் ஒருவருக்கே ஆராதனை செய்யுங்கள்.

அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் பாகால்களையும் அஸ்தரோத்தையும் விலக்கி விட்டு, கர்த்தர் ஒருவருக்கே ஆராதனை செய்தார்கள்.

பின்பு சாமுவேல்: நான் உங்களுக்காக கர்த்தரை மன்றாடும்படிக்கு, இஸ்ரவேலர் எல்லாரையும் மிஸ்பாவிலே (மிஸ்பா என்ற ஊரிலே) கூட்டுங்கள் என்றான்.

அவர்கள் அப்படியே மிஸ்பாவிலே கூடிவந்து தண்ணீர் மொண்டு, கர்த்தருடைய சந்நிதியில் ஊற்றி, அன்றைய தினம் உபவாசம்பண்ணி, கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்தோம் என்று அங்கே சொன்னார்கள். மிஸ்பாவிலே சாமுவேல் இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரித்துக் கொண்டிருந்தான்.

இஸ்ரவேல் புத்திரர் மிஸ்பாவிலே கூடிவந்ததைப் பெலிஸ்தர் கேள்விப்பட்டபோது, பெலிஸ்தரின் அதிபதிகள் இஸ்ரவேலுக்கு விரோதமாக எதிர்த்து வந்தார்கள். அதை இஸ்ரவேல் புத்திரர் கேட்டு, பெலிஸ்தரினிமித்தம் பயப்பட்டு, சாமுவேலை நோக்கி: நம்முடைய தேவனாகிய கர்த்தர் எங்களைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கும்படிக்கு, எங்களுக்காக அவரை நோக்கி ஓயாமல் வேண்டிக்கொள்ளும் என்றார்கள். அப்பொழுது சாமுவேல் இஸ்ரவேலுக்காக கர்த்தரை நோக்கி வேண்டிக்கொண்டான். கர்த்தர் அவனுக்கு மறுமொழி அருளிச்செய்தார்.

அப்பொழுது இஸ்ரவேலர் மிஸ்பாவிலிருந்து பெலிஸ்தரைப் பின்தொடர்ந்துபோய், பெத்காரீம் பள்ளத்தாக்குமட்டும் அவர்களை முறிய அடித்தார்கள். அப்பொழுது சாமுவேல் ஒரு கல்லை எடுத்து, மிஸ்பாவுக்கும் சேணுக்கும் நடுவாக நிறுத்தி, இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார் என்று சொல்லி, அதற்கு எபெனேசர் என்று பேரிட்டான். இந்தப்பிரகாரம் பெலிஸ்தர் அப்புறம் இஸ்ரவேலின் எல்லையிலே வராதபடிக்குத் தாழ்த்தப்பட்டார்கள். சாமுவேலின் நாளெல்லாம் கர்த்தருடைய கை பெலிஸ்தருக்கு விரோதமாய் இருந்தது.

பிரியமான சகோதரனே சகோதரியே,

எபெனேசர் என்றால் அதற்கு இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார். இம்மட்டும் காத்தவர் தொடர்ந்து காப்பவராயுள்ளார். எபெனேசராகிய தேவனிடத்தில் சேரும்படி இஸ்ரவேலர் மிஸ்பாவுக்கு வந்தார்கள்.

உங்கள் வழிகளை சீர்தூக்கிப்பாருங்கள். அசுத்தமானதை உங்கள் நடுவிலிருந்தும் உங்கள் வீட்டிலிருந்தும் நீக்கிப்போடுங்கள். உங்கள் இருதயத்தைக் கர்த்தருக்கு நேராக்குங்கள். கர்த்தர் ஒருவருக்கே ஆராதனை செய்யுங்கள். அப்போது நமது இருதயத்தின் வேண்டுதல்களை அருளிச்செய்வார். இழந்து போன நிம்மதியையும் சந்தோசத்தையும் பெற்று சமாதானத்தோடு வாழ தேவன் அருள் செய்வார்.

**எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞயிறு காலை 10:00 மணிக்கு தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அன்போடு அழைக்கின்றேன்.**

## கிருபையின் கூடார அப்போஸ்தல சபை

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

# கருப்பொருளை கவனியுங்கள்

நெடுஞ்சாலை ஒன்றிலே, சாலை விதியை மீறி குறிப்பிட்டிருந்த வேகத்திற்கு இன்னும் அதிவேகமாக சென்று கொண்டிருந்த மோட்டார் வண்டியையொன்றை பொலிசார் இடைமறித்து நிறுத்தினார்கள். வாகனத்தை ஓட்டிச் சென்ற மனிதனுடைய வாகனப் பதிவையும், அனுமதிப் பத்திரங்களையும் சோதித்த பின்பு, நாட்டின் சட்டத்திற்கமைய அந்த மனிதனுக்குரிய அபராதங்கள் வழங்கப்பட்டது. மேலும், சாலைவிதிகளை நன்றாகக் கவனித்து வாகனத்தை ஓட்டிச் செல்லுமாறு எச்சரிப்பு செய்ததுடன் சில சாலை விதிகளை குறித்த ஆலோசனைகளையும் வழங்கினார்கள்.

ஒரு தேசத்தின் காவற்துறையினர் ஒரு சமுகத்தின் பாதுகாப்பிற்காகவும், நாட்டின் சட்டதிட்டங்களை அமுல்படுத்தும்படிக்கும் நியமனம் பெற்றுள்ளார்கள். பொலிசார் கொடுத்த அபராதங்கள் அம்மனிதனுக்கு நீதியுள்ளதாக தோன்றாவிடின், அதை மேன்முறையீடு செய்வதற்கு நீதி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. சிலவேளைகளிலே இந்த உலகிலுள்ள நீதிமன்றங்கள் தவறினாலும், உள்ளந்திரியங்களை ஆராய்ந்து, மனிதர்களுடைய இருதயத்திலுள்ளவைகள் எல்லாவற்றையும் அறிந்த தேவன் ஒரு போதும் தவறிப்போதில்லை. எனவே மற்றவர்கள் செய்யும் அநீதியான செயல்களையும், அநியாயங்களையும் குறித்து அலசி ஆராய்வதில் எங்கள் வாழ்நாட்களை வீணடிக்காமல் மற்றவர்கள் தங்கள் கடமைகளில் தவறி அநீதி செய்யும் போது, அதற்கு பதிலடியாக நாங்களும் எங்கள் கடமைகளை தவறவிட்டு பாவம் செய்யாதபடிக்கு நாங்கள் தேவ வார்த்தையின்படி தேவ நீதியை எங்கள் வாழ்வில் நிறைவேற்றுவதையே எங்கள் எண்ணமாகவும் ஏக்கமுமாகவும் செய்கைகளாகவும் கொண்டிருக்க வேண்டும்.

இந்த உலகத்திலே மக்களின் நன்மை கருதியே நியமனங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. நன்மையான நியமனங்கள் யாவும், இந்த பூமியிலே நாங்கள் சுகமாய் வாழ்வதற்கு ஏற்படுத்தப்பட்டவைகள். தாயின் கர்ப்பத்திலே எங்களை முன்குறித்த தேவன், நாங்கள் இந்த பூமியிலே எங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் யாவும் பரிசுத்தமாக காக்கப்பட வேண்டும் என்பதையே விரும்புகின்றார். ஆனால் எந்த ஒரு மனிதனும் தன் வாழ்வின் நோக்கத்தை மறந்து பாவ வழிகளை தெரிந்து கொண்டால், அது அவனவனுடைய தீர்மானமாகவே இருக்கும்.

உயிர் வாழும் நாட்களிலே, எங்கள் ஆவி, ஆத்துமா, சரீரத்தை கறை திறை அற்றதாக பாதுகாக்கும்படிக்கும், கிறிஸ்துவின் சாயலிலே நாங்கள் அனுதினமும் வளர்ந்து பெருகும்படிக்கும், தேவன்தாமே பல ஈவுகளை எங்களுக்கு கொடுத்திருக்கின்றார். அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தியிருக்கின்றார். ஊழியங்க ளுக்கு ஒத்தாசையாக இருக்கும்படிக்கு மூப்பர்களும், உதவி ஊழியர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். (எபேசியர் 4:13)

குறிப்பாக நாங்கள் செல்லும் சபையின் மேய்ப்பர், அவருக்கு ஒத்தாசையாக இருக்கும் மூப்பர்களும், உதவி ஊழியர்களும் எங்கள் வாழ்

வில் தொடர்ச்சியாக நாம் தேவனுடைய ஞான நன்மைகளை பெறும்படி நம்மை விசாரித்து வருகின்றார்கள். பிரதானமாக சபை யின் மேய்ப்பன், தன் மந்தையை (விசுவாசிகளை) ஆவிக்குரிய உணவாகிய தேவ வார்த்தைகளால் போஷிக்கின்றார். அந்த தேவ வார்த்தைகளுக்குள் நித்திய ஜீவனுக்கு தேவையான யாவும் அடங்கியிருக்கின்றது. அந்த ஜீவ வார்த்தைகளெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. அந்த வார்த்தைகளால் நாங்கள்: ஆறுதலடைகின்றோம், தேற்றப்படுகின்றோம், உற்சாகப்படுத்தப் படுகின்றோம், பாவ சாப ரோக கட்டுகளிலிருந்து விடுதலையடைகின்றோம், அற்புத அதிசயங்களை வாழ்வில் காண்கின்றோம். இவைகளை மனிதர்கள் விரும்புகின்றார்கள். இவைகள் மட்டுமல்ல, தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. ஆனால், மனிதகுலம் இந்த உலகத்திலே பாவம் செய்த நாளிலிருந்து இன்றுவரைக்கும் பெரும்பான்மையானோர் உபதேசத்தையும், கடிந்துகொள்ளுதலையும், சீர்திருத்தலையும், நீதியைப் படிப்பிக்குதலையும் விரும்புவதில்லை.

தேவ அழைப்பைப் பெற்ற ஜனங்கள் தேவனை மறந்து தங்களது கண்போன போக்கிலே வாழந்து வந்தபோது, அவர்களை சீர்கேடான பாவ வழிகளைவிட்டு மனந்திரும்புங்கள் என்று காலத்திற்கு காலம் தேவன் தம்முடைய வார்த்தைகளை, தம் தாசர்கள் வழியாக அறிவித்தார். ஜனங்களோ, தேவ ஊழியர்களை, பைத்தியம் பிடித்தவர்கள் என்று அவர்களை அடித்தார்கள், சிறையிலிட்டார்கள், கொலை செய்தார்கள். முன்குறித்த காலத்தில், மனிதகுலத்தை மீட்கும்படி வந்த தேவ குமாரனாகிய இயேசு, எண்ணுக்கடங்காத அற்புதங்கள் அதிசயங்கள் வழியாக மனிதர்களுக்கு நன்மைகளைச் செய்தார். அந்த நன்மைகள் யாவையும் ஜனங்கள் ஏற்றுக் கொண்டார்கள். வயிராற உணவு உண்டார்கள். ஆனால், அவருடைய உபதேசத்தையும், கடிந்துகொள்ளுதலையும், சீர்திருத்தலையும், நீதியைப் படிப்பிக்குதலையும் கேட்ட போது, கோப மடைந்தார்கள் அவரை சிலுவையிலே அறைந்தார்கள். அவருக்கு பின் வந்த அவருடைய ஊழியர்களையும் துன்புறுத்தினார்கள். அதுபோலவே இன்றும் உபதேசத்தையும், கடிந்துகொள்ளுதலையும், சீர்திருத்தலையும், நீதியைப் படிப்பிக்குதலையும் கேட்கும் போது ஏற்றுக் கொள்ள மனதில்லாதவர்களாக கலகங்களை ஏற்படுத்துகின்றார்கள்.

நெடுஞ்சாலையிலே நூற்றுக் கணக்கான வாகனங்கள் சென்று கொண்டிருக்கும் போது, பொலிசார் அங்குள்ள யாவரையும் இடைமறித்து வாகனத்தை மெதுவாக ஓட்டிச் செல்லுங்கள் என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை. குறிப்பாக சட்டத்தை மீறி அதிக வேகமாக சென்ற அந்த மனிதனுக்கே எச்சரிப்பும், அபராதமும் வழங்கப்பட வேண்டியதாயிருந்தது. வாகனங்களை எம்மைவிட அதி வேகமாகவே ஓட்டிச் செல்லும் மற்றய மனிதர்கள் தப்பிவிட்டார்களே என்று கவலையடையாமல், நீ விபத்துகளில் மாட்டிக் கொண்டு மரித்துப் போகாமல் எச்சரிப்பைப் பெற்றமைக்காக நன்றியுள்ளவர்களாக நாம் இருக்க வேண்டும். அதுபோலவே. தேவனுடைய பிரமாணங்களை மீறி, தன் வாழ்விற்கும், தன்னை சூழ உள்ளவர்களின் வாழ்விற்கும் அதிக பங்கம் விளைவி

க்கும் முன்னதாக, சபையின் மேய்ப்பர், குறிப்பாக அந்த நபருக்கு என்ன விடயத்தில் அவர் மீறுகின்றார் என்று உபதேசித்து, எச்சரித்து, கடிந்துகொண்டு, சீர்திருந்தும்படி நீதியை கற்றுக் கொடுக்கின்றார். தன் வாகனத்தை வேகமாக ஓட்டிச் சென்ற அந்த மனிதன், பொலிசாருக்கு ஏன் இந்த வேலை என்று கூறமுடியுமா? முடியாது! இத்தனை பொது மக்களுக்கு முன்பாக என்னை இடைமறித்தது எவ்வளவு அவமானமான செயல் என்பதை சற்று சிந்தித்துப் பார்த்திருக்கலாமே என்று சொல்வது சரியா குமா? ஆகாது! வாகனத்தை ஓட்டிச் செல்பவரினது பாதுகாப்பை யும், நெடுஞ்சாலையிலுள்ள மற்ற வாகன ஓட்டிகளின் பாதுகாப்பையும், பாத சாரிகளின் பாதுகாப்பையும் முன்னிட்டு போடப்பட்ட நாட்டின் சட்ட ங்களை நிலைநாட்டும்படி வேலைக்கு அமர்த்தப்பட்ட அந்த பொலிஸ் உத்தியோகத்தர் தன் கடமையைத் தான் செய்தார்.

மேய்ப்பனில்லாத ஆடுகளை வனவிலங்குகள் பீறிப்போடும். மேய்ப்பனா னவன் அவைகளிலிருந்து தன் மந்தைக்கு பாதுகாப்பைக் கொடுக்கின் றான். அதுபோலவே மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல பாவ புல்வெ ளியில் மேய்கின்ற மனிதர்களின் ஆத்துமா அழிந்து போகாதபடிக்கு, சபையின் மேய்ப்பனானவன் அவர்களை எச்சரித்து வழிநடத்துகின்றான். தன் மந்தையில் ஒரு விசுவாசி தவறிச் செல்லும் போது அந்த விசுவாசி செய்யும் தவறு என்ன என்பதையும், அதிலிருந்து விடுதலையடையும் வழி எது என்பதையும், அதிலிருந்து விடுதலையடைய மனதில்லாமல் தொடர்ந்து அந்தத் தவறான வாழ்க்கை வாழ்வதனால் வரப்போகும் பாதகமான முடிவு எது என்பதையும் கற்றுக் கொடுக்க வேண்டியது மேய்ப்பனுடைய கடமையாக இருக்கின்றது. நல்ல விசுவாசிகள் மேய்ப்ப னுடைய எச்சரிப்பின் சத்தத்திற்கு செவி கொடுக்கின்றார்கள்.

பாடசாலையில் கல்வி கற்கச் சென்ற ஒரு மாணவன், ஆசிரியர் பாடங்களை கற்றுக் கொடுக்கும் போது வேற சிந்தையாக இருந்து வந்தான். ஆசிரியர் கொடுக்கும் வீட்டு வேலைகளை ஒழுங்காக செய்யாமல் அசட்டை செய்து வந்தான். இப்படி நடந்து கொள்ளும் மாணவனைப் பற்றிய ஆசிரியரின் கடமை என்ன? அந்த மாணவனின் மனதை புண்படுத்தக்கூடாது என்று அந்த ஆசிரியர் அவனை அப்படியே விட்டுவிடுவாரா? குறிப்பிட்ட மாணவன் தன் வாழ்வை அழித்துக் கொள்ளாமல் வாழ்வில் முன்னேறும்படிக்கு அந்த ஆசிரியர் தன் அதிகாரத்திற்குட்பட்ட எல்லா ஒழுக்க நெறிகளையும் நிச்சயமாக செய்து கொள்வார். அந்த மாணவனுக்கு அறிவுரை கூறுவார். அவனை கண்டித்து, பாடசாலையின் ஒழுங்கின்படியுள்ள தண்டனைகளை வழங்கு வார். பெற்றோரை அழைத்து அவனுடைய முன்னேற்றத்தை குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி பேசுவார். ஒரு மாணவன் பாடங்களை ஒழுங்காகக் கற்காமல் பரீட்சையில் கொடுக்கப்படும் கேள்விகளுக்கு தவறான பதில்களை எழுதும் போது தவறான பதில்களை தவறு என்றும், சரியான பதில்களை சரி என்றும் சுட்டிக் காட்டுவது ஆசிரியரின் கடமை. இறுதிப் பரீட்சையில் சித்தி பெறாத வனை நீ சித்தி பெற்றாய் என்று கூறமுடியாது. அப்படி ஒரு ஆசிரியர் தன் கடமைகளை சரிவரச் செய்யும் போது "என் மனதை வேதனைப் படுத்தி விட்டீர்கள்" என்று ஒரு மாணவன் கூறுமுடியுமா? அல்லது இது என் மகனின் தனிப்பட்ட விடயம் (Personal life) என் மகனை அவன் பாட்டிற்கே விட்டு விடுங்கள்" என்று அவன் பெற்றோர் கூற முடியுமா?

முடியாது! அந்த மாணவன் தன் பாடங்களில் முன்னேறும்படி தன் வாழ்க்கையை ஒழுங்கு படுத்த வேண்டும். அவன் பெற்றோர் அதற்கு ஒத்தாசையாக இருக்க வேண்டும்.

அது போலவே நாங்கள் நாளுக்கு நாள் கிறிஸ்துவின் சாயலில் வள ர்ந்து பெருக வேண்டும். அந்த நிலையை அடையும்படி, நடை உடை பாவனையைக் குறித்து போதிக்கப்படும் போதகத்தை தள்ளிவிடும் விசுவாசிகளும், தன் பாடங்களில் கவனமற்றிருந்த அந்த மாணவனைப் போலவே இருப்பார்கள். இது என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கை நான் நினைத்தபடி வாழுவேன் என்று ஒரு மனிதன் கூறுபவனாக இருந்தால், அதன் முடிவு அழிவாக இருக்கும். மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன் றுகிற வழி உண்டு அதின் முடிவோ மரண வழிகள். (நீதிமொழிகள் 14:12) எனவே, வேத போதனைகளை கேட்டு அதற்கு கீழ்ப்படியும் மனநிலை யுடையவர்களாக இருக்க வேண்டும். போதிப்பவர்கள் வேத வார்த்தை யின்படி தங்கள் கடமையை செய்ய அவர்களுக்கு இடங் கொடுங்கள்.

ஒரு சமயம், முன்குறித்த தவணைக்குப் பின், தன் குடும்ப வைததியரை சந்திக்கும்படிக்கு ஒரு மனிதன் சென்றிருந்தான். அந்த வைத்தியர், பல மருத்துவ சோதனைகளை செய்த பின்பு, சில நாட்களுக்குப் பின் அந்த மனிதனை மறுபடியும் தன்னைச் சந்திக்க வரும்படியாக அழைத்தார். “உன் சோதனைகளின் முடிவு நன்மையானதாகத் தோன்றவில்லை, சில நோய்களின் அறிகுறிகள் தென்படுகின்றன. உனக்கு, நான் கூறிய ஆலோசனைகளின்படி, நீ ஆரோக்கியமான ஆகாரங்களை உண்பது கிடையாது. நேரத்திற்கு தூங்குவது இல்லை. உடற்பயிற்சி செய்வதி ல்லை, கொடுத்த மாத்திரைகளை ஒழுங்காக எடுப்பதில்லை. நீ இப்ப டியாக உன் ஆரோக்கியத்தைக் குறித்து கரிசனையற்றவனாய் வாழ்ந் தால் உன் முடிவு நன்மையாக இருக்கப்போவதில்லை” என்று கடுமை யான தொனியிலே கண்டித்துப் பேசினார். அந்த வைத்திய சாலை யிலே, வெளியே காத்திருந்த மனிதர்களும் அதைக் கேட்டுக் கொண்டி ருந்தார்கள். அந்த மனிதனோ, வைத்தியர் என்னை அவமானப்படுத்தி விட்டார் என்று கோபம் கொண்டான். வைத்தியர் அமைதியான தொனி யிலே பேசியிருந்தால் அது நலமாகயிருந்திருக்கும் என்பதை நாங்கள் யாவரும் ஏற்றுக் கொள்வோம். ஆனால் வைத்தியர் கூறிய யாவும் உண்மையே. கோபமுற்றிருக்கும் அந்த மனிதன் தனக்கு நன்மையு ண்டாக அவன் என்ன செய்ய முடியும்? வைத்தியரோடு கோபமடைந்து அவரோடு வாக்குவாதம் செய்வதால் அவன் கொண்டிருக்கும் நோயின் அறிகுறிகள் அவனைவிட்டு போய்விடப் போவதில்லை. வைத்தியரை மாற்றி வேறு வைத்தியரிடம் சென்றாலும், அவன் தன் வாழ்க்கை முறையை மாற்றினாலொழிய அவன் ஆரோக்கியமடையப் போவதி ல்லை. வைத்தியரின் தொனியில் அதிக கவனத்தைச் செலுத்தி, நேர த்தை விரயப்படுத்துவதைவிட, வைத்தியர் சொன்னவற்றின் கருப்பொ ருளை உற்று நோக்கி தன் வாழ்க்கை முறையை மாற்றுவதில், நேர த்தை செலவிடுவதே அவன் தனக்கு செய்யக் கூடிய நன்மையாக இருக்கும்.

இதே போலவே, ஆவிக்குரிய நோய்களின் (ஆன்மீக நோய்கள்) அறிகுறிகள் தென்படும் போது, எங்களை வழிநடத்த நியமிக்கப்பட்ட வர்கள், அதை சம்மந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்க வேண்டியது அவர்

கள்மேல் விழுந்த கடமை. ஆனால் இன்று விசுவாசிகளில் பலர், தங்கள் ஆன்மீக நோயின் அறிகுறிகளை ஏற்றுக் கொண்டு, தங்கள் வாழ்க்கையை வேத வார்த்தைகளின்படி திருத்திக் கொள்வதில் நேரத்தை செலவிடவதற்குப் பதிலாக, தங்களுக்கு ஆலோசனைகள் கூறுபவர்கள் எப்படி கூறியிருக்க வேண்டும், எங்கு கூறியிருக்க வேண்டும், எந்தத் தொனியில் கூறியிருக்க வேண்டும் என்பதை விவாதம் செய்வதில் அதிக நாட்களை வீணடிக்கின்றார்கள்.

நாங்கள் உங்களிடத்தில் பட்சமாய் நடந்துகொண்டோம் பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல, நாங்கள் உங்கள்மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்தோம் என்றும், மேலும், தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்கவேண்டுமென்று, தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள் என்று தேவ ஊழியராகிய பவுல் தெசலோனிக்கேயா சபையினருக்கு கூறினார். எனவே தாயைப் போல தேற்றும் அன்பும் அரவணைப்பும் உண்டு, அதே நேரத்திலே தந்தையைப் போல கண்டித்து தண்டித்து நடத்தும் சிட்சையும் உண்டு. (1 தெச 2: 6-12, எபிரெயர் 12:5-8, உபாகமம் 1:31)

அன்புடன் அறிவிக்க வேண்டிய காரியங்களை, அவமானமடையும்படியாய் அறிவிப்பது மனவருத்தத்திற்குரியது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அறிவிக்க பட்ட காரியத்தின் கருப்பொருளை நோக்கி பார்த்து நாங்கள் எங்களை திருத்திக் கொள்ள வேண்டிய பகுதிகள் உண்டாயிருந்தால், அதை நாங்கள் முதலாவதாக செய்து கொள்வதே அவசியமானது. மாறாக, அதிகாரங்களுக்கு எதிர்த்து நின்று வாக்குவாதங்களையும், கலகங்களையும் ஏற்படுத்துவதால், எங்களிடம் இருக்கும் குறைகளோடு, இன்னும் அதிக பிரிவினையின் பாதகங்களை எங்கள் மேல் ஏற்றிக் கொள்வோம்.

இந்த கட்டுரையில் குறிப்பிடப்பட்ட உதாரணங்களுக்கு ஒத்ததாகவே, பல மனிதர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றும்படி, வீட்டில், வேலையில், கல்வி நிலையங்களில, வெளி இடங்கிளில் மற்றும் ஆலயத்தில் நியமிக்கப்பட்டிருக்கலாம். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு கொடுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றும் போது நாம் அவர்கள் மேல் கோபம் கொள்ள முடியாது.

இந்த உலகிலே அதிகார துஷ்பிரயோகங்கள் ஆங்காங்கே நடப்பதுண்டு. தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அவருடைய சித்தத்தை நிறைவேற்றும் அதிகாரத்திலுள்ளவர்களும், அவருடைய வார்த்தையின்படி நியமிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு கீழ்ப்படிந்து தேவ சித்தத்தை நிறை வேற்றுகின்றவர்களும் அதற்குரிய பலனை அடைந்து கொள்வார்கள். அதிகார துஷ்பிரயோகம் செய்பவர்களும், அடங்காதவர்களும் ஒரு வேளை இந்த உலகிலுள்ளவர்களுக்கு தப்பினாலும், நீதியுள்ள தேவனாகிய கர்த்தருடைய ஆளுகையிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறித்து அறிந்து கொள்ள பின்வரும் வேத வசனங்களை வாசியுங்கள். தேவனுடைய வார்த்தை

க்கு அடங்காதவர்கள் நித்திய ஆக்கினை அடைவார்கள் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகின்றவர்கள நித்திய ஜீவனை அடைவாரகள். (பிரசங்கி 3:16-17, ரோமர் 2:4-6, மத்தேயு 12:36, மத்தேயு 23:1-39, யூதா 1:14-16, மத்தேயு 25:31-46)

நீங்கள் ஒரு ஆவிக்குரிய சபையிலே இணைந்து கொள்ள தீர்மானித்த பின்பு, தேவனுடைய வார்தைக்கமைய உங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குங்கள். எதற்கும் எதிர்த்து நிற்கின்றவர்களாயும், அடங்காதவர்களாயும் இருக்காதீர்கள். மேய்ப்பருக்கும், அதிகாரத்திலுள்ளவர்களுக்கும் கீழ்ப்படியுங்கள். எந்த ஒரு சூழ்நிலைகளிலும் கலகத்திற்கும் பிரிவினைகளுக்கும் காரணிகளாக மாறிவிடாதிருங்கள். எந்த ஒரு விடயத்திலும் தவறிவிட்டேன் என்று உணரும் போது, தேவ வார்த்தையின்படி அதை சீர்ப்படுத்திக் கொள்ளுங்கள். மன்னிப்பை தாரளாமாக வழங்குங்கள், மன்னிப்பை கேட்க வேண்டிய இடத்தில் தயக்கமின்றி கேட்டுக் கொள்ளுங்கள். மற்றவன் என்னைப் பற்றி என்ன நினைப்பான் என்பதை குறித்து கவலையடையாமல், தேவன் என்னைக் குறித்து என்ன நினைக்கின்றார் என்பதிலே கண்ணும் கருத்துமாக இருங்கள்.

இந்த உலகத்தோடு அழிந்து போகும் கல்வி, செல்வம், சுகம் போன்றவற்றிற்காக அதிகதிகமாக பிரயாசப்பட ஆயத்தமாக இருக்கின்றோம். அவற்றிற்காக எங்கள் வாழ்க்கை முறையையும், எங்கள் பிள்ளைகளின் வாழ்க்கை முறையையும் மாற்றியமைக்க தயக்கம் காட்டுவதில்லை. அப்படியானால், அழியாத நித்திய வாழ்வைக் குறித்து இன்னும் அதிக கரிசனையுடன் பிரயாசப்பட வேண்டும். காவற்துறையினரை பிடிக்கவில்லை என்று நாடுவிட்டு நாடு மாறாலாம், ஆசிரியரைப் பிடிக்கவில்லை என்று பாடசாலையை மாற்றலாம், வைத்தியரைப் பிடிக்கவில்லை என்று வைத்தியரை மாற்றலாம், முகாமையாளரைப் பிடிக்கவில்லை என்று வேலையை மாற்றலாம் ஆனால் என் மனம் மாறாமல் இவைகளை மாற்றுவதால், வாழ்வில் ஒரு நன்மையும் வரப்போவதில்லை. மாறாக, எங்கள் பிள்ளைகள் தங்கள் வாழ்வின் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ளாமல், இடம்விட்டு இடம் பாய்கின்றவர்களாக பயிற்றுவிக்கப்பட்டு விடுவார்கள். இப்படியாக தவறான சூழ்நிலைகளில் வளர்க்கப்படும் பிள்ளைகள், தங்கள் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ளும் வழிகளை எண்ணாமல், விவாக ஒப்பந்த ங்களையும் சலனமின்றி உடைத்துப் போடுகின்றார்கள்.

அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணைசெய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து, அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். உங்களுக்குள்ளே சமாதானமா யிருங்கள் என்று பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். (1 தெச 5:12-13)

**கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதாமே உங்களை வழிநடத்துவாராக! ஆமேன்.**

# கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டேன்

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

**பிரதான வசனம் :** கலாத்தியர் 2:20

இன்றைய நாளிலே உங்கள் ஆத்துமா பெலனற்றுப் போயிருந்தால் அல்லது மரித்துப் போனதுபோல காணப்படுமாயிருந்தால், கர்த்தரிடத்திலே அறிக்கை செய்யுங்கள், அவருடைய வசனத்தை கவனமாகக் கேளுங்கள், ஏனெனில் கர்த்தருடைய வசனம் உங்களை உயிர்ப்பிக்கின்றதாயிருக்கின்றது.

கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன் ஆயினும், பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் என்ற வசனத்தை கூறும்போது சபையிலுள்ள யாவரும் ஆமேன் என்று ஆமோதிப்பார்கள். இந்த வசனம் உங்கள் வாழ்க்கையிலே உண்மையாக இருக்கின்றது என்று கூறுகின்றவர்கள் உங்கள் கரங்களை உயர்த்திக் காண்பியுங்கள் என்றால், அதிகப்படியானோர் தங்கள் கரங்களை உயர்த்துவார்கள். இந்த வேளையிலே உங்கள் இருதயத்தை ஆராய்ந்து பார்த்து, இந்த வசனத்தின்படி என் வாழ்க்கை இருக்கின்றதா அல்லது இல்லையா என்று நீங்களே உங்கள் மனதிலே சொல்லிக் கொள்ளுங்கள். நான் கிறிஸ்துவோடே கூட சிலுவையிலே அறையப்பட்டிருக்கின்றேனா? கிறிஸ்து எனக்குள் ஜீவிக்கின்றாரா?

இந்த உலகம் பாவ சாபத்திலே கட்டப்பட்டிருக்கின்றது. கிறிஸ்துவை அறியாமல் இந்த உலக போக்கிலே வாழ்கின்றவர்கள் எப்போதுமே பாவ சாபத்திற்கு உட்பட்டிருக்கின்றார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒருவர் மட்டுமே நித்தியமான இந்த பாவ சாபத்திலிருந்து மனிதர்களை மீட்க வல்லவராயிருக்கின்றார். எனவே ஒருவன் இயேசு கிறிஸ்துவில் அன்பு கூராதவனாக இருந்தால், அவர் அருளும் மீட்ப்பை அவன் புறக்கணிக்கின்றான். ஒரு செல்வந்தர் எங்களுக்கு ஒரு ரொக்க பரிசை கொடுக்கும் போது, பெரு மகிழ்ச்சியோடு அதை ஏற்றுக் கொண்டு, அந்த மனிதரின் பெருந்தன்மையை நினைத்தும் அவருக்கு நன்றியுள்ளவர்களாகவும், அவரை எப்போதும் அன்பு கூருகின்றவர்களாயும் இருப்பது மனிதனுடைய இயல்பாயிருக்கின்றது.

ஒரு மனிதனானவன் தான் எவ்வளவாய் பாவ சாபத்திற்குள் கட்டப்பட்டிருக்கின்றேன் என்று உணராமலும், தன் தலையின் மேல் இருக்கும் ஆக்கினைத் தீர்ப்பை அறியாமலும் இருப்பானாக இருந்தால், அவனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பை உணர முடியாது. இதனால் அவன் அந்த சாபத்திற்கு உட்பட்டவனாகவே வாழ்கின்றான். ஆதலால், ஒருவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் அன்புகூராமற்போவானானால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் என்றும் கர்த்தர் வருகிறார் என்றும் பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. பொதுவாக மனித

ர்களுடைய நீதிகளெல்லாம் தேவனுடைய நீதிக்கு முன்பாக அழுக்கான கந்தைபோல இருக்கிறது. அப்படியிருந்தும் மனிதர்கள், தங்களிடம் இருக்கும் காரியங்களை உமக்காக விட்டு விடுகின்றேன் என்று கண்ணீரோடு தேவனிடம் கூறுவதுண்டு. ஆனால் மனிதர்களுடைய மேன்மைகள் எதுவும் தேவனுக்கு வேண்டியதில்லை. மனிதன் பாவத்திலிருந்து மீட்படையும்படி தேவனுடைய அனுக்கிரகம் மனிதனுக்கு இன்றியமையாததாக இருக்கின்றது.

இயேசு ஏன் சிலுவையிலே அறையப்பட்டார்? இந்த உலகத்தின் பாவம் போக்க, மனித குலம் சாபத்திலிருந்து நீங்கலாக்கி மீட்படையும்படி, இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு வந்து, பாடுகள் பட்டு, சிலுவையிலே அறையப்பட்டு, மனித குலத்தின் பாவங்களுக்காக தன் ஜீவனைக் கொடுத்து, மூன்றாம் நாளில் மரணத்தை மேற்கொண்டு உயிர்த்தெழுந்தார். இது எம்மீது அன்பு கூர்ந்த நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தமாக இருக்கின்றது. இயேசு கிறிஸ்து உலகின் பாவத்தையும் சாபத்தையும் சிலுவையிலே பரிகரித்தார். சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்து பிரதியட்சமாய் உங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கி ன்றார்.

தேவ ஊழியராகிய பவுல் (முன்பு சவுல் என்று அழைக்கப்பட்டவர்) ஏன் தான் சிலுவையிலே அறையப்பட்டிருக்கின்றேன் என்று கூறினார்? அதாவது, கிறிஸ்துவை அறியமுன்பு பாவ, சாபத்திற்குட்பட்டிருந்த பழைய மனுஷனாகிய சவுல் சிலுவையிலே அறையப்பட்டாயிற்று. நீக்கமுடியாத நித்திய ஆக்கினைக்கென்று நியமிக்கப்பட்ட பழைய வாழ்க்கையானது சிலுவையில் அறையப்பட்டாயிற்று. இப்போது ஜீவிக்கின்ற புதிய மனுஷனாகிய பவுல் சாபத்திற்கு உட்பட்டவரல்ல. இனி பழைய மனுஷனுமல்ல கிறிஸ்துவே பவுலுக்குள் ஜீவிக்கின்றார். நாம் இயேசு கிறிஸ்து வழியாக மீட்கப்பட்ட நாளிலே ஆக்கினைக்குட்பட்டிருந்த எங்கள் பழைய மனுஷனுக்குரிய வாழ்க்கை கிறிஸ்துவோடே கூட சிலுவையிலே அறையப்பட்டாயிற்று. இந்த பெரிதான சிலாக்கியமானது நாங்கள் கண்ணீரோடும் கவலையோடும் எல்லாவற்றையும் இயேசு கிறிஸ்துவுக்காக விட்டுவிட்டேன் என்று அறிக்கை செய்கின்ற துக்கமான காரியம் அல்ல. அந்த நாள் மகிழ்ச்சியின் நாள்!

இனிமேல் பாவ சாபத்திற்குரிய பழைய வாழ்விற்கு என்மேல் அதிகாரம் இல்லை. பழைய வாழ்விலே இந்தப் பூமியின் மேன்மைகள் என்று கருதப்பட்டவைகள், தேவனுடைய பார்வையிலே அழுக்கான கந்தைகள். அவைகள் என்னை விட்டு கடந்து சென்றுவிட்டது. நான் இனி இந்த உலகத்திற்குரியவன் அல்ல. நான் பரலோகத்திற்குரியவன். தற்போது நித்திய ஜீவனுக்கென்று முன்குறிக்கப்பட்ட வாழ்க்கை வாழ்கின்றேன். நான் அல்ல, வானத்திலும் பூமியிலும் சகல அதிரகாமுள்ள கிறிஸ்துவே என்னில் ஜீவிக்கின்றார்.

[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும்
இணையத் தளத்தில் (**INTERNET WEBSITE** இல்)
தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம்.]

# ராஜரீகமான ஆசாரியக்கூட்டம்

இஸ்ரவேல் புத்திரர் எகிப்தின் அடிமைத்தனத்தினால் தவித்து கொண்டிருப்பதையும், அவர்களுடைய உபத்திரவத்தையும், ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலையும், அவர்கள் படுகிற வேதனைகளையும் கர்த்தர் அறிந்திருந்தார். அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், அவர்களை அந்தத் தேசத்திலிருந்து நீக்கி, பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டு போய்ச் சேர்க்கவும் தேவன் இறங்கினார். தம்முடைய ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கும்படிக்கு, தேவன் தம்முடைய தாசனாகிய மோசே என்னும் மனிதனை எகிப்தின் ராஜாவாகிய பார்வோனிடத்திற்கு அனுப்பினார். கர்த்தர் மோசேயை நோக்கி: நீ பார்வோனிடத்தில் போய், "எனக்கு ஆராதனை செய்ய என் ஜனங்களை அனுப்பிவிடு". என்று சொல் என்றார். எகிப்தின் ராஜா தன் இருதயத்தை கடினப்படுத்திய போதும், தேவனாகிய கர்த்தரோ, தம்முடைய ஜனங்கள் தம்மை ஆராதிக்கும்படி தம்முடைய ஓங்கிய புயத்தினாலும். பலத்த கரத்தினாலும் அவர்களை பார்வோனின் கைக்கு விலக்கி மீட்டார். தம்முடைய துதியை சொல்லி வரும் ஜனங்களாக அவர்களை ஏற்படுத்தினார். பிரியமானவர்களே, தம்முடைய ஜனங்கள் அடிமைத்தனத் திலிருப்பதை தேவன் ஒருபோதும் விரும்பியதில்லை. நாங்களும் தேவனை அறியாத காலங்களிலே, பாவத்தின் அடிமைத்தன கட்டுகளிலிருந்தோம். தேவனுடைய கிருபை பிரசன்னமான போது, இயேசு கிறிஸ்து வழியாக அந்தகார இருளிலிருந்து ஆச்சரியமான ஒளிக்கு கொண்டுவரப்பட்டோம். அடிமைத்தன கட்டுக்களிலிருந்து விடுதலை அடைந்தோம். தேவனாகிய கர்த்தர் தாமே, தம் முடைய துதியை சொல்லி வரும் ராஜரீகமான ஆசாரியர் கூட்டமாக எங்களை மாற்றினார். எல்லாவற்றிற்கும் மேலான சர்வ வல்லமையுள்ள தேவனைத் துதித்துப் போற்றும் பெரிதான சிலாக்கியத்தை பெற்ற நாம் மன மகிழ்ச்சியோடு அவருக்கு ஆராதனை செய்வோம்.

**1 பேதுரு 2:9**

நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.

**ஜெபம்**: பராக்கிரமமுள்ள தேவனே, உம்முடைய துதியை சொல்லி வரும் ஜனங்களாக எங்களை அழைத்தீர். அந்த அழைப்புக்கு பாத்திரராக நாங்கள் வாழும்படிக்கு எங்களை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# துதிகளின் மத்தியில் வாசம் செய்யும் தேவன்

இந்த உலகிலே, பல மனிதர்கள் மனதிலே சமாதானமின்றி வாழ்ந்து வருகின்றார்கள். பொருளாதாரச் செழிப்பு நிறைந்தவர்களும், தங்கள் வாழ்வுக்குப் போதுமான வசதி உள்ளவர்களும், மிகவும் கஷ்டத்தில் வாழ்பவர்களும் இதற்குள் அடங்குவார்கள். தாம் சமானதானத்தை அடைய வேண்டும் என்பதற்காக பற்பல காரியங்களைச் செய்து, தங்கள் வாழ்க்கையை மாற்றியமைக்க எத்தனிக்கின்றவர்கள் பலர். மனச் சமாதானத்தை அடைய வேண்டும் என்று முயற்ச்சிகள் எடுப்பது நல்லது. ஆனால், சமாதானத்தின் ஊற்று எங்கள் இருதயத்தில் சுரக்கும் வரை, சமாதானக் காரணர் எங்கள் இருதயத்தை ஆட்கொள்ளும்வரை மனிதர்கள் நாடித் தேடும் சமாதானத்தை ஒரு நாளும் அடையப் போவதில்லை. தேவன் வாசம் செய்யும் இடத்தில் பூரண சமாதானம் உண்டு. துதிகளின் மத்தியிலே வாசம் செய்யும் எங்கள் தேவன் எங்கள் இருதயத்தில் வாசம் செய்ய விரும்புகின்றார். எனவே தேவனைத் துதிக்கும் துதி எங்கள் இருதயத்தில் எப்போதும் இருக்க வேண்டும். தேவைகள், நெருக்கங்கள், இன்னல்கள் பெருகும் போது, அவை மனக் கவலையை உண்டு பண்ணிவிடும். நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை **ஸ்தோத்திரத் தோடே கூடிய** ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும்மேலான தேவ சமாதானம் உங் கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. உங்கள் சரீரம் தேவன் தங்கும் ஆலயமாக இருக்கும்படிக்கு, உலக இச்சைகளைச் களைந்து, தேவனை நோக்கி ஏறெடுக்கும் துதி, ஆலயமாகிய உங்களுக்குள்ளே எப்போதும் இருப்பதாக. இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர். அந்த பரிசுத்தமான தேவன், துதி பெருகும் எங்கள் இருதயத்தில் வாசமாக இருந்தால், எந்தப் பயமும் எங்களை ஆட்கொள்ள முடியாது. எனவே, விண்ணப்பங்கள், வேண்டுதல்களை தேவனாகிய கர்த்தருக்கு தெரிய ப்படுத்தி, அவருடைய ஆளுகையையும், வல்லமையான செயல்களையும் அறிக்கையிட்டு துதியுங்கள். உதடு களின் கனியாகிய ஸ்தோத்திரப் பலிகளை செலுத்துங்கள். கர்த்தரை உயர்த்தும் பாடல்களை பாடி, அவருக்குரிய ஆராதனையைச் செய்யுங்கள்.

**சங்கீதம் 22:3**

இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர்.

**ஜெபம்**: உன்னதங்களில் வாசம் செய்யும் தேவனே, உம்முடைய சமாதானம் என்னில் நிலைத்திருக்கும்படி ஆவியோடும் உண்மையோடும் நான் உம்மைத் துதிக்க என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தர் உங்களுக்காய் யுத்தம் செய்வார்

**2 நாளாகமம் 20:15**

நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார் இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது.

யோசபாத் என்னும் ராஜா யூத ராஜ்யத்தை அரசாண்ட நாட்களிலே, மோவாப் புத்திரரும், அம்மோன் புத்திரரும், அவர்களோடே அம்மோனியருக்கு அப்புறத்திலுள்ள மனுஷருங்கூட திரளானவர்கள் யோசபாத்திற்கு விரோதமாய் யுத்தம்பண்ண வந்தார்கள். அப்பொழுது யோசபாத் ராஜாவும், தேசத்தின் குடிகளும் கர்த்தரைத் தேடுகிறதற்கு ஒருமுகப்பட்டு, கூடினார்கள் அப்பொழுது யோசபாத் ராஜா: யூதா ஜனங்களும் எருசலேமியரும் கூடின சபையிலே நின்று: தேவனைத் துதித்து ஆராதித்தான். “எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தாவே, பரலோகத்திலிருக்கிற நீரல்லவோ தேவன் தேவரீர் ஜாதிகளுடைய ராஜ்யங்களையெல்லாம் ஆளுகிறவர் உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமமும் இருக்கிறது, ஒருவரும் உம்மோடு எதிர்த்து நிற்கக்கூடாததென்று”. தேவன் செய்த மகத்துவமான செயல்களை அறிக்கையிட்டான். அப்பொழுது “இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது.” என்ற தேவனுடைய வார்த்தை ஜனங்களுக்கு அறிவிக்கப்பட்டது. அப்பொழுது யோசபாத் தரைமட்டும் முகங்குனிந்தான் சகல யூதா கோத்திரத்தாரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரைப் பணிந்துகொள்ளக் கர்த்தருக்குமுன்பாகத் தாழவிழுந்தார்கள். கோகாத்தியரின் புத்திரரிலும் கோராகியரின் புத்திரரிலும் இருந்த லேவியர் எழுந்திருந்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மகா சத்தத்தோடே கெம்பீரமாய்த் துதித்தார்கள். யுத்த நாளிலே, துதியை சொல்லுகின்றவர்கள் ஆயுதம் அணிந்தவர்களுக்கு முன்னாக நடந்துபோய், கர்த்தரை துதித்தார்கள். அவ்வேளையில் எதிரிகள் ஒருவரோடொருவர் தங்களுக்குள்ளே யுத்தம் செய்து அழிந்து போனார்கள். அது போலவே எங்கள் வாழ்க்கையிலும் அலையலையாய் ஏராளமான சவால்கள் வந்தாலும், பயப்படாமலும் கலங்காமலும், கர்த்தரை துதிக்க வேண்டும். அவர் செய்த மகத்துவமான கிரியைகளை அறிக்கையிட வேண்டும். கர்த்தர் எங்களோடு இருந்தால், எதிரியாகிய சாத்தானின் சதிகள் எங்களை ஒரு போதும் மேற்கொள்ள முடியாது. கர்த்தர் தம்முடையவர்களுக்காக யுத்தம் செய்கின்றவர். தூய உள்ளத்தோடு தேவனுக்கு துதி ஆராதனையைச் செலுத்துங்கள்.

**ஜெபம்**: மகத்துவமுள்ள தேவனே, நான் எண்ணுவதற்கு அதிகமாக எதிரிகளின் சூழ்ச்சிகள் என்னை எதிர்த்து வந்தாலும், கலங்காமல் உம்முடைய மகத்துவங்களை அறிக்கையிட்டு உம்மைத் துதிக்க என்னை பெலப்படுத் தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

📖 மாலை வாசகம் – சங்கீதம் 18:1 – 6

# துதியினால் உண்டாகும் விடுதலை

தேவ ஊழியராகிய பவுல், பிலிப்பு என்னும் பட்டணத்திலே இருந்த நாட்களிலே, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எதிர்ப்பட்டாள். பவுல் தாமே, இயேசுவின் நாமத்தினாலே, குறிசொல்ல ஏவுகிற அசுத்த ஆவியை அந்தப் பெண்ணிடமிருந்து அகற்றி, அந்தப் பெண்ணுக்கு விடுதலை யைக் கொடுத்தார். அவள் அந்த பொல்லாத ஆவியிலிருந்து விடுத லையடைந்தாள் என்று சந்தோஷப்படு வதற்குப் பதிலாக, அவளுடைய எஜமா ன்கள் தங்கள் ஆதாயத்து நம்பிக்கை அற்றுப்போயிற்றென்று கண்டு, பவுலை யும் சீலாவையும் பிடித்து, அவர்கள் வஸ்திரங்களை கிழித்து, அநேக அடி அடித்தபின்பு, சிறைச்சாலையிலே வை த்து அவர்களைப் பத்திரமாய்க் காக்கு ம்படி சிறைச்சாலைக்காரனுக்குக் கட்ட ளையிட்டார்கள். சிறைச்சாலைக்காரன், அவர்களை உட்காவலறையிலே அடைத்து, அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் மாட்டிவைத்தான். நற்செய்தியை அறிவித்து, நன்மையை நடப்பிக்கின்ற இவர்களுக்கு இப்படிப்பட்ட பரிதாபமான நிலைமை உண்டாயிற்று. வெளியே இரு ந்து பார்ப்பவர்களுக்கு இது ஒரு அவல நிலையாக இருந்தாலும், அவர்களின் இருதயத்திலே தேவ சமாதானம் இருந்தது. தேவனைக் குறித்த அன்பும் வாஞ்சையும் பற்றி எரிந்து கொண்டேயிருந்தது. நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித் துப் பாடினார்கள் காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சடிதியிலே சிறைச் சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந் தது. உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது. எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயிற்று. அந்த இராத்திரியிலே சிறைச்சாலைக் காரனுடைய குடும்பத்தில் பெரிதான அற்புதம் நடைபெற்றது. தன் வீட்டார் அனைவரோடுங்கூட தேவனிட த்தில் விசுவாசமுள்ளவனாகி மனம கிழ்ச்சியாயிருந்தான். பிரியமானவ ர்களே, ஊழியத்தின் பாதையிலே வரும் சவால்களைக் கண்டு சோர் ந்து போய்விடாதிருங்கள். உபத்திரவங்கள் மத்தியிலும் தேவனைத் துதியுங்கள். தேவன் பெரிதான விடுதலையை உண்டு பண்ணுவார். உங்கள் துதியினால் உங்களைச் சூழ இருப்பவர்களின் வாழ்விலே விசுவாசமும், குடும்பங்களிலே மனமகிழ்ச்சியும் உண்டாகும்.

**அப்போஸ்தலர் 16:25**

நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பா டினார்கள்.

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, எங்கள் வாழ்வின் சூழ்நிலை களைக் கண்டு மருண்டு போகாமல், எப்போதும் உம்மைத் துதித்து ஆராதிக்கும் மேன்மையை உணர்ந்து வாழ கிருபை செய்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

புதன் | மாசி 5

📖 மாலை வாசகம் – சங்கீதம் 73:26

# எல்லோருடைய நன்மைகளுக்காகவும் நன்றி செலுத்துங்கள்.

பல தரப்பட்ட தேவைகளோடுள்ள ஜனங்கள் ஒரு கிராமமொன்றிலுள்ள ஆலயமொன்றிலே இருந்தார்கள். குறிப்பாக ஒரு தந்தையார் தன்னுடைய மகளின் எதிர்காலத்திற்காக பல மாதங்களாக தொடர்ச்சியாக வேண்டுதல் செய்து வந்தார். ஆலயத்திலுள்ள வேறொரு சிறுமைப்பட்ட குடும்பத்திலுள்ள பெண்ணிற்கு நினையாத பிரகாரமாக நல்ல திருமணம் ஒன்று நிச்சயிக்கப்பட்டது. இந்த சம்பவம், தன் மகளின் எதிர்காலத்திற்காக வேண்டுதல் செய்து கொண்டிருக்கும் மற்றய தந்தையாரின் செவிகளில் எட்டிற்று. பரந்த மனமுள்ள அந்தத் தந்தையார், அப்படியாக, சிறுமைப்பட்டிருந்த மற்றய குடும்பத்தில் நடந்த நன்மைக்காக தேவனுக்கு நன்றி கூறினார். தேவரீர் நீர் நினைத்த காரியத்தை தடைசெய்ய யாராலும் கூடாது. நீர் எல்லோருக்கும் நன்மை செய்கின்ற தேவன், எனக்கும் நன்மை செய்வீர் என நல் மனதுடன் தேவனை ஸ்தோத்தரித்தார். பிரியமான சகோதர சகோதரிகளே, எங்கள் வாழ்வில் இன்று அநேக தேவைகள் இருக்கலாம். சில வேண்டுதல்களை தேவனிடத்தில் ஏறெடுத்திருக்கலாம். எங்கள் தேவைகள் யாவற்றையும் அறிந்த தேவன், அதினதின் காலத்தில் நேர்த்தியாகவும் செம்மையாகவும் யாவையும் நடத்தி முடிப்பார் என்று விசுவாசித்து, எங்களை சூழ இருப்பவர்களின் வாழ்வில் நடைபெறும் நன்மைகளுக்காக நல்மனதுடன் தேவனை ஆராதிக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும். அப்போஸ்தலராகிய பவுலின் வாழ்க்கையையும் அவரோடு கூட இருந்த உடன் ஊழியர்களின் வாழ்க்கையையும் சற்று சிந்தித்துப் பாருங்கள். நற்செய்தி அறிவிப்பதினால் அநேக துன்பங்களும் பாடுகளும் அவருடைய வாழ்க்கையில் இருந்தபோதும், தெசலோனிக்கேயர் சபையிலே நடந்து வரும் நன்மைகளை அறிந்த போது, அவர்கள் இன்னும் தேவனுக்குள் பெருகும்படியாக, அவர்களுக்காக இடைவிடாமல் விண்ணப்பம்பண்ணி, அவர்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரித்தார்கள். இப்படிப்பட்ட சிந்தையுள்ளவர்கள்மேல் தேவன் பிரியமாக இருக்கின்றார். எனவே எங்களுக்கு தேவைகள் இருந்தாலும், எங்களைச் சூழ உள்ளவர்களின் வாழ்க்கையில் நடக்கும் நன்மைகளுக்காக தேவனை ஸ்தோத்தரிப்போம்.

**1 தெச 1:4**

**எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக்குறித்து விண்ணப்பம்பண்ணி, உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்.**

**ஜெபம்:** அன்புள்ள தேவனே, எங்களைச் சூழ உள்ளவர்களின் வாழ்வில் நடைபெறும் நன்மைகளுக்காக உம்மை ஸ்தோத்தரிக்கும் நன்றி நிறைந்த உணர்வுள்ள இருதயத்தை எனக்குத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரன்

ஒரு தொழிற்சாலையிலே, புதிதாக உற்பத்தி செய்யப்படும் உற்பத்தி பொருளை, விற்பனை செய்வதற்காக ஒரு விற்பனை முகாமையாளர் வேலைக்கு அமர்த்தப்பட்டார். அந்த விற்பனையாளர் பயணம் செய்வ தற்கென மோட்டார் வண்டி தொழிற்சாலையினால் வழங்கப்பட்டது. இந்தச் செய்தி, பல ஆண்டுகளாக மிகவும் கண்ணியமாக வேலை செய்து வந்த சிரேஷ்ட கணக்காளா ரின் செவிகளை எட்டியது. "தொழிற் சாலையின் ஆரம்ப நாட்களில் இரு ந்து நான் இப்படியாக பல சவால்கள் மத்தியிலும் வேலை பார்த்து வருகி ன்றறேன். ஆனால் எனக்கு அப்படியாக சலுகைகளை வழங்கவில்லை, ஆனால் புதிதாக வந்த ஒருவருக்கு நீங்கள் இப் படி செய்கின்றீர்களே" என்று மேல்மு றையீடு செய்தார். அந்த தொழிற்சாலை யின் உரிமையாளர் அவரை நோக்கி: "நீ ஆரம்ப நாட்களில் இருந்தே என க்கு உண்மையுடன் அதிகமாய் பிரயா சப்பட்டாய். தொழிற்சாலையின் விவ காரங்களை முன்னெடுத்து செல்லும்படியாய் உன்னை மத்திய குழு விலே ஆலோசகனாக ஏற்படுத்தினேன். நீ வேலை செய்வதற்கு தேவை யான யாவற்றையும் உனக்குத் தாராளமாய் கொடுத்திருக்கின்றேன். நீ இந்த காரியாலயத்திலே மட்டும் வேலை செய்கின்றாய். அந்த விற்பனை யாளனோ, ஒவ்வொரு நாளும் இந்த மாகாணத்திலே அதிகதிகமாய் பிரயாணப்பட வேண்டும், ஆகவே மோட்டார் வண்டி அவனுடைய வேலைக்கு அத்தியாவசியமானது" எனக் கூறினார். இதற்கொத்ததா கவே, எங்கள் தேவைகள் இன்னதென்றறிந்த பரமபிதா எங்கள் ஒவ் வொருவரின் தனித்துவமான அழைப்பை நிறைவேற்றுவதற்குரிய தேவைகள் யாவற்றையும் எங்களுக்கு தந்திருக்கின்றார். ஒவ்வொருவ ருக்கும் வரங்கள் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம், ஒரே சரீரத்தின் அவய வங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது. வரங் களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே. எனவே மற் றவனிடம் இருப்பது என்னிடம் இல்லை என்று எண்ணாமல், எங்களுக்கு அருளப்பட்டிருக்கும் ஞானநன்மைகளை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டு தேவ சித்தத்தை நிறைவேற்றுவோம்.

**1 பேதுரு 4:10**

**அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்.**

இதைச் சார்ந்த வேதாகம வாசகம் 1 கொரிந்தியர் 12:4-12

**ஜெபம்:** நீதியின் தேவனே, சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம் என்ற உண்மையை உணர்ந்து, இந்தப் பூமியிலே உம்முடைய சித்தம் நிறைவேற்றும்படிக்கு முன்னேறிச் செல்ல கிருபை செய்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனத்தாழ்மையுடன் பணி செய்யுங்கள்

ஒரு ஊரிலே வசித்து வந்த ஒரு மனிதனும் அவன் குடும்பமும், அவர்கள் வாழும் சமுதாயத்திற்கு பெரும் ஒத்தாசையாக இருந்து வந்தார்கள். ஏழை எளியவர்களுக்கு தாராளமாக தான தர்மம் செய்து வந்தார்கள். சில ஆண்டுகளுக்கு பின், அந்த ஊரிலே புதிதாக குடி யேறிய வேறு ஒரு ஸ்தாபனத்தைச் சார்ந்த மனிதர்கள் சிலர், இலவச கல்வி மருத்துவ வசதிகளை அந்த ஊரிலுள்ள வறியவர்களுக்கு வழங்கினார்கள். இதை அறிந்து கொண்ட மற்றய மனிதனின் மகன் தன் தந்தையை நோக்கி: "அப்பா நாங்கள் அல்லவா முதலில் இந்த உதவிகளை ஆரம்பித்தோம், இப்போது எங்களைச் சாராத வேறு மனிதர்களும் எங்கள் அனுசரணையில்லாமல் உதவி களை வழங்குகின்றார்களே" என்று கூறி னான். அதற்கு அவன் தந்தை: "மகனே, இந்த ஊரில் அநேகர் பல தேவைக ளோடு வாழ்கின்றார்கள். அவர்கள் யாவரின் தேவைகளையும் முற்றும் முழுதாக எங்களால் செய்வதற்கு எங் களுக்குத் திராணியில்லை. நன்மை யான நோக்கத்தோடு மற்றவர்கள் செய்யும் உதவிகளை நாங்கள் நல் மனதுடன் வரவேற்க வேண்டும். எங்கள் நோக்கம், எங்கள் குடும்பத்தின் பெரு மையல்ல, இந்த ஊரில் வாழும் ஜனங்களின் தேவைகள் சந்திக்கப்பட வேண்டும் என்பதே எங்கள் பிரதான நோக்கம்" பிரியமானவர்களே, என்னூடாக அல்லது எங்கள் குடும்பம் வழியாக அல்லது எங்கள் சபை வழியாக மாத்திரமே நன்மைகள் நடைபெற வேண்டும் என்கி ன்ற மனநிலையை எங்களைவிட்டு நாம் அகற்றிவிட வேண்டும். தேவ னாகிய கர்த்தர் எங்களுக்கு கொடுத்த பொறுப்பை, எங்களுக்கு கொடு க்கப்பட்ட பெலத்தின்படி நாங்கள் நிறைவேற்றி முடிப்பதே அவசி யமானது. ஒரு சிலர் வாதுக்கும் தங்கள் சுய பெருமைக்கும் கிரியை களை நடப்பித்தால், அவர்கள் அதற்குரிய பலனை அடைவார்கள். விதண்டாவாதங்களும், சுய பெருமையும் பரலோகத்தில் இல்லை. எனவே அவர்கள் அவற்றை இந்தப் பூமியிலே தான் கண்டடைய முடியும். நீங்களோ, நான் என்கின்ற எண்ணத்தை களைந்து விட்டு, தாழ்மையுள்ள சிந்தையைத் தரித்தவர்களாக, உங்களுக்கு கொடுக்கப் பட்ட அளவி ன்படி, நற்கிரியைகளை நடப்பியுங்கள்.

**பிலிப்பியர் 2:3**

ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்.

**ஜெபம்**: நன்மை செய்யும் தேவனே, நான் ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத் தாழ்மையோடு, நீர் தந்த பொறுப்பை நிறைவேற்ற என்னை பெலப்படுத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நம்மை நித்திய வாழ்விற்க்கென்று நியமித்தார்

இந்த உலகத்திலே பலர் சுதந்திரமாக வாழ வேண்டும் என்று விரும்புகின்றார்கள். அதாவது மற்றவர்கள் தங்கள் வாழ்க்கையில் இடைப்பட்டு புத்திமதிகளையும், ஆலோசனைகள் கூறுவதையும், அதை செய்யாதே அல்லது இதை செய்யாதே என்று கூறப்படும் ஒழுங்கு முறைகள் கட்டளைகளை பலர் விரும்புவதில்லை. இப்படிப்பட்டவர்கள் தங்கள் விருப்பப்படி ஒரு சமுதயாத்தைவிட்டு தங்களுக்கு ஏற்ற பிரகாரமாக வாழக்கூடிய இன்னுமொரு சமுதாயத்தை தேடுகின்றார்கள். அவர்கள் இந்தப் பூமியிலே உயிர்வாழும் நாட்கள் வரைக்கும், அவர்கள் எங்கே சென்றாலும் ஒழுங்கு முறைகளும், கட்டளைகளும் அவர்களை பின்தொடருகின்றது. எடுத்துக்காட்டாக, ஒரு மனிதன் தான் நினைத்த பிரகாரமாக வாகன அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொண்டு, தன் ஈஷ்டப்படி நெடுஞ்சாலையில் வாகனங்களை ஓட்டிச் செல்ல முடியாது. இப்படியாக வேலையிலும், பாடசாலையிலும், செல்லும் இடமெங்கும் எவருமே தங்கள் மனவிருப்பப்படி காரியங்களை மாற்றியமைக்க முடியாது. மனிதனுடைய வாழ்வானது ஒழுங்கு முறைகளாலும் கட்டளைகளாலும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. இவைகளைக் குறித்து பல மனிதர்கள் முறையீடு செய்வதில்லை. முறுமுறுப்பதில்லை. ஆனால் ஆத்துமாவைக் குறித்த விடயங்களிலும், பரிசுத்தமான வாழ்வு வாழ்வதற்குரிய ஒழுங்கு முறைகளையும் கட்டளைகளையும் குறித்தே மனிதர்கள் முறையீடு செய்கின்றார்கள். முறுமுறுக்கின்றார்கள். பிரியமானவர்களே, தேவனுடைய கட்டளைகளை மனதார கைகொள்ளுகின்றவர்கள் முடிவில்லாத வாழ்வை கண்டடைகின்றார்கள். தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார். பரலோகத்திலே நித்திய ஜீவனை அடையும்படி யாவரையும் அழைக்கின்றார். ஆனால் இந்த உலகப் போக்குகளோ தேவனுடைய அழைப்பிற்கு எதிராக செயற்பட்டு வருகின்றது. தேவன் தந்த ஒழுங்கு முறைகளையும் கட்டளைகளையும் அசட்டை செய்கின்றது. பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, தேவ ஆலோகனைகளையும், ஒழுங்குகளையும் எங்கள் வாழ்வில் கடைப்பிடிப்போம்.

**1 தெச 5:9**

**தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார்.**

**ஜெபம்**: என் பெலவீனங்களை அறிந்த தேவனே, வேதத்திலுள்ள பரிசுத்தவான்களைப் போல, நானும் என்னைத் தாழ்த்தி, ஒரு புதிய ஆரம்பத்திற்காக காத்திருக்கும் பொறுமையைத் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நிறைவான நிம்மதி

இன்றைய உலகிலே பல மனிதர்கள் நிம்மதியை தேடி அலைகின்றார்கள். நிறைவான வாழ்வை அடையும்படி பல கிரியைகளை நடப்பிக்கின்றார்கள். விதிவிலக்கு ஏதுமின்றி, ஏழை, ஐசுவரியவான்கள், உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள், கல்விமான்கள், பேதமையுள்ளவர்கள் யாவரும் இந்தப் பட்டியலில் அடங்குவார்கள். வெளித் தோற்றத்திற்கு நிறைவான வாழ்வு இருப்பது போல தோற்றமளித்தாலும், மனதிலே சமாதானம் இல்லை. நிம்மதியாய் படுத்து உறங்க முடியவில்லை என்ற நிலையில் இருப்பவர்கள் அநேகர். உலகத்திலே வசதிகள் தாராளமாக இருந்தாலும், தாங்கள் அடைந்து கொண்ட ஐசுவரியம், அந்தஸ்து, கல்வியறிவு போன்றவைகளால் எதிர்பார்த்த மன நிறைவு வரவில்லை. ஏழ்மை, தாழ்ச்சி, பேதமையினால் பல துன்பங்கள் வாழ்வில் ஏற்படுகின்றது. இந்த உண்மையை அறிந்தாலும், அதை ஏற்றுக் கொள்கின்றவர்கள் ஒரு சிலரே. ஐசுவரியம், அந்தஸ்து, கல்வியறிவு, ஏழ்மை, தாழ்ச்சி, பேதமை போன்ற யாவும் இந்த உலகத்திற்குரியவைகளே. உலகமும் அதிலுள்ளவைகளும் குறைவுள்ளவைகளே. குறைவுள்ளவைகளால் நிறைவை அடைய முடியாது. பரலோகத்திற்குரியவைகளே நிறைவுள்ளவைகள். ஐசுவரியம், அந்தஸ்து, கல்வியறிவு, ஏழ்மை, தாழ்ச்சி, பேதமை போன்ற எந்நிலையில் இருந்தாலும், தன் வாழ்வை இயேசுவிடம் ஒப்புக் கொடுக்கின்றவனே பரலோகத்திற்குரிய சமாதானத்தை அடைந்து கொள்கின்றான். “சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலுமிருப்பதாக.” என்று இயேசு கூறியிருக்கின்றார். எனவே எங்கள் வாழ்வை முழுமையாக இயேசுவிடம் ஒப்புக் கொடுக்கும் போது, அதாவது அவர் கூறிய வார்த்தையின் வழியிலே வாழும் போது, நாங்கள் எந்த நிலையில் இருந்தாலும், நிறைவான நிம்மதியை கண்டடைவோம். எனவே இந்த உலகத்தினால் உண்டாகுவதானது, அற்ப சூழ்நிலைகளால் மாற்றமடைந்து போகும், நாம் தற்காலிகமான மன நிறைவை நாடித்தேடாமல், இயேசு தரும் நித்திய சமாதானத்தை நாடித் தேடுபவர்களாவோம்.

**யோவான் 14:27**

**சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்.**

**ஜெபம்**: சமாதானத்தின் தேவனே, போய்க் கொண்டிருக்கும் இந்த உலகத்தின் வஞ்சகமான வலைக்குள் சிக்காதபடிக்கு, உம்முடைய வார்த்தையின் வழியில் வாழ என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும்இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேசத்தின் சுபீட்சம்

"தேசத்தின் ஆளுமையில் இப்படியான மாற்றங்கள் உண்டாகினால் தேசத்திற்கு நன்மை உண்டாகும்" என்று தன்னுடைய அபிப்பிரயாத்தை ஒரு மனிதன் தன் நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டான். பொதுவாக இப்படிப்பட்ட சம்பாஷணைகளுக்கு நாங்கள் எவரும் விதிவிலக்கான வர்கள் அல்ல. நாங்கள் விரும்பும் ஒரு வேட்பாளரோ அல்லது கட்சியோ வெற்றி பெறும் போது நாம் பெரும் ஆரவாரப் படுகின்றோம். இவ்வாறன புத்துணர்ச்சிகள் யாவும் ஒரு சில மாதங்களுக்குள் கடந்து போய்விடுகின்றது. மனிதர்கள் எப்பொழுதுமே தேசத்தின் சமாதானத்தை மற்றவர்களின் பொறுப்பு என்று எண்ணிக் கொள்கின்றார்கள். அதாவது, ஆளுகையில் இருப்பவர்கள் இப்படிச் செய்ய வேண்டும். அல்லது அந்த அதிகாரியானவர் அப்படிச் செய்ததால், நிலைமை இப்படியாக மாறிவிட்டதே. என்று பொதுவாக மற்றவர்கள்மேல் குற்றங்ககளைச் சுமத்தி விடுவது மனித சுபாவமாக இருக்கின்றது. "தேசம் தன் குடிகளின் மூலமாய் தீட்டுப்பட்டது" என்று தீர்கதரிசியாகிய ஏசாயா வழியாக அன்று தேவன் தம்முடைய ஜனங்களுக்கு அறிவித்தார். தேசத்தின் சமாதானம் ஆளுனர்களினால் உண்டாகுவதில்லை. சமாதானக் காரணராகிய இயேசு இல்லாமல் சமாதானம் உண்டாவதில்லை. அந்த சமாதானத்தின் காரணரை அறிந்த நாங்கள் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய எங்களை அர்ப்பணிக்கும் போது, அவர் தேசத்தின் சாபங்களை நீக்கி, சமாதானத்தை அனுகிரகம் செய்வார். எனவே பரிசுத்த வேதாகமத்திலே தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு கூறியது போல, தேவனாலே தெரிந்து கொள்ளப்பட்ட நாங்கள் எங்களைத் தாழ்த்தி, எங்கள் பொல்லாத வழிகளை விட்டு திரும்பி, தேவனுடைய வழிகளிலே நடக்க எங்களை ஒப்புக் கொடுத்து ஜெபிக்கும் போது பரலோகத்திலிருக்கின்ற தேவன், நம் தேசத்திற்கு எப்போதுமே நன்மை செய்வார்.

**2 நாளாகமம் 7:14**

என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்.

**ஜெபம்:** பரலோக தேவனே, தேசத்திலே நன்மை உண்டாகத் தக்கதாக, என் வழிகளை உம்மிடம் ஒப்படைத்து, உம் வார்த்தையின்படி வாழ எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | மாசி 11

📖 மாலை வாசகம் – 1 தீமோ 6:15–16

# சர்வத்தையும் ஆளும் சர்வவல்லவர்

எரேமியா என்னும் தீர்க்கதரிசியின் நாட்களிலே, தேவனாலே தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களின் அக்கிரமம் மிகுதியாய் பெருகிற்று. அநேக வருடங்களாக அவர்கள் எச்சரிக்கப்பட்டும் மனந்திரும்ப மனதில்லாமல் தங்கள் பொல்லாத வழிகளிலே வாழ்ந்து வந்தார்கள். அந்த ஜனங்கள் உணர்வடையும்படிக்கு, தேவன்தாமே, அந்த தேசத்தை நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவின் கையிலே கொடுத்தார். (எரேமியா 27:6). அந்த ராஜா, உண்மையான தேவன் யார் என்பதை இன்னும் அறியாமல் விக்கிரகங்களை வழிபட்டுக் கொண்டு வந்த நாட்களிலேயே, அவனுக்கு மிகுந்த வல்லமையை தேவன் கொடுத்திருந்தார். யூதா கோத்திரத்தின் புத்திரராகிய தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்னும் இளைஞர்கள் நேபுகாத்நேச்சாரினால் சிறைப்பிடிக்கப்பட்டு பாபிலோனுக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். இந்த இளைஞர்களோ அந்நிய தேசத்திலே, தேவனை அறியாத ஜனங்கள்மத்தியிலே வாழ்ந்த போதும், எந்த விதத்திலும் எதிலும் சமரசம் பேசாமல், தங்கள் சாட்சியுள்ள வாழ்க்கையை யாவர் முன்னிலையிலும் காத்துக் கொண்டார்கள். இந்த நான்கு இளைஞர்கள் வழியாக உண்மையான தேவன் யார் என்பதை நேபுகாத்நேச்சாருக்கு தேவனாகிய கர்த்தர் வெளிப்படுத்தினார். பிரியமானவர்களே, இந்தப் பூமியும் அதன் நிறைவும் அதன் குடிகளும் கர்த்தருடையது. அவருடைய ஆளுகைக்கு மேற்பட்ட அதிகாரங்கள் ஒன்றுமில்லை. அந்த நான்கு இளைஞர்கள் வழியாக, தானே உண்மையான தேவனென்பதை வெளிப்படுத்திய தேவனாகிய கர்த்தர் என்றென்றும் சர்வ வல்லமையுள்ளவராக இருக்கின்றார். எனவே, நாங்களும் அந்த இளைஞர்களைப் போல தேவனுடைய வழிகளிலே சமரசமற்ற சாட்சி யான வாழ்க்கை வாழும் போது, எங்கள் வழியாக, யார் உண்மை யான தேவன் என்பதை ஆளுமைமிக்க அதிகாரிகளும் அறிந்து கொள்வார்கள். எங்கள் தேவன் தேசத்தில் நன்மைகளை பெருகச் செய்வார்.

**தானியேல் 4:37**

ஆகையால் நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் ராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி, மகிமைப்படுத்துகிறேன். அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள். அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று எழுதினான்.

பாபிலோனிலே பிரதானிகளின் தலைவன், தானியேலுக்கு பெல்தெஷாத்சார் என்றும், அனனியாவுக்கு சாத்ராக் என்றும், மீஷாவேலுக்கு மேஷாக் என்றும்,

**ஜெபம்**: பராக்கிரமமுள்ள தேவனே, உம்முடைய ஆளுகைக்கு மேற்பட்ட அதிகாரங்கள் ஒன்றுமில்லை என்பதை நான் உணர்ந்து, உம்முடைய வழிகளிலே சாட்சியாக வாழ என்னை பெலப்படுத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| புதன் \| மாசி 12 | 📖 மாலை வாசகம் – ரோமர் 13:1 – 7 |
|---|---|

# குறைவுகளை நிறைவாக்கும் தேவன்

சோதோம் கொமோராவின் அக்கிரமம் பெரியதும் கொடியதுமாயிருந்தது. அதனால் தேவன் அந்த பட்டணங்களை நியாயந்தீர்க்க சித்தம் கொண்ட போது, ஆபிரகாம் என்னும் தேவ தாசன், அந்த பட்டணங்களுக்காக பல தடவைகள் பரிந்து பேசி தேவனிடம் வேண்டிக் கொண்டார். இறுதியாக "பத்து நீதிமான்கள் அந்த பட்டணத்தில் இருந்தால் அவர்கள் நிமித்தம் அதை அழிப்பதில்லை என்று தேவன் கூறினார். ஆனால் சோதோம் கொமோராவில் பத்து நீதிமான்கள் கூட காணப்படவில்லை. நாம் கிறிஸ்துவை பற்றும் விசுவாசத்தினாலே அவர் வழியாக கிருபையினாலே மீட்பைப் பெற்று நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். இது தேவனால் உண்டான ஈவு. எனவே தேசத்திற்காக திறப்பின் வாசலிலே நின்று ஊக்கத்தோடே நாங்கள் ஜெபிக்க வேண்டும். "நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும். நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்." என்று தேவ ஊழியராகிய பவுல் அறிவுரை கூறியிருக்கின்றார். ஆதலால் பிரியமான சகோதர சகோதரிகளே, தேசத்திலே நன்மை உண்டாகத்தக்கதாக, உலகத்திலுள்ளவர்கள் பேசும் அவிசுவாசத்தின் வார்த்தைகளை அறிக்கையிடாமல், விசுவாசத்தின் வார்த்தைகளை அறிக்கை பண்ணி பரிந்து பேசி ஜெபிக்கக்கடவோம். அதிகாரத்திலுள்ளவர்கள் மத்தியில் உள்ள குறைகள் யாவையும் கர்த்தர் நிறைவாக்க வல்லமையுடையவர். காரிருள் தேசத்தை மூடிகொள்ளாதபடி, ஒளிவீசும் சுடர்களாக எழுந்து பிரகாசியுங்கள். கர்த்தர் நீங்கள் வாழும் தேசத்தை ஆசீர்வதிப்பார்.

**1 தீமோத்தேயு 2:1**

நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்

**ஜெபம்**: உண்மையுள்ள தேவனே, உம்முடைய வார்த்தையின்படியே நாங்கள் தேசத்தின் இருள் நீங்கும்படியாய் விசுவாச அறிக்கை செய்து ஜெயமெடுக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ வசனத்தைக் கைக்கொள்வோம்

ஒரு வாலிபன், அவன் உயர்கல்வி கற்கும் நாட்களிலேயே தம் பெற்றோருக்கு பொருளாதார ரீதியிலே பெரும் ஒத்தாசையாக இருந்து வந்தான். தன்னுடைய இஷ்டப்படி, தனக்கு கிடைக்கும் ஓய்வு நேரங்களிலே, பகுதி நேரமாக வேலை செய்து, சம்பாதித்த பணத்தின் ஒரு பகுதியை தன் குடும்ப செலவிற்காக கொடுத்து வந்தான். ஊரிலும் அயலிலும் வெளிப் பார்வைக்கு அவன் மற்றய வாலிபர்களுக்கு ஒரு மாதிரியாக காணப்பட்டான். ஆனால், அவன் தன் பெற்றோருக்கு கீழ்ப்படியும் காரியத்திலே குறைவுள்ளவனாக இருப்பதால் பெற்றோர் மனவேதனை அடைந்தார்கள். பிரியமானவர்களே, இரக்கமும் கீழ்ப்படிவும் கிறிஸ்தவ வாழ்க்கையின் அடிப்படையான அம்சங்கள். நாங்கள் விரும்பும் காரியங்களிலே மட்டும் கீழ்ப்படிவை காண்பித்து, நாங்கள் விரும்பாத காரியங்களிலே ஆலோசனைகளை தள்ளிவிட்டு அதிகாரங்களை பொருட்படுத்தாமல் வாழ்வது கீழ்ப்படிவு அல்லவே. தேவனுக்கு எதிராகப் பாவம் செய்யும்படி எந்த பெற்றோரோ அல்லது அதிகாரங்களோ பணிப்பதில்லை. குறிப்பிட்ட சில விதிவிலக்குகள் ஆங்காங்கே சிலருடைய வாழ்க்கையிலே இருக்கலாம். அப்படியான சூழ்நிலைகளிலே தேவனுடைய வசனத்தையே கைக்கொள்ள வேண்டும் என நாங்கள் யாவரும் அறிந்திருக்கின்றோம். ஆனால் எங்கள் வாழ்க்கை முழுவதும் விதிவிலக்கு அல்ல. இன்றைய நாட்களிலே, அந்த வாலிபனைப் போல, சிலர் நல்ல செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு ஒருவரை ஒருவர் முந்திக் கொள்கின்றார்கள். மற்றவர்கள் நன்மையடையும்படி அதிக நேரத்தை அவைகளிலே செலவிடுகின்றார்கள். ஆனால் தங்களுக்கு நியமிக்கபட்ட அதிகாரங்களுக்கு தங்களுக்கு இஷ்டமான காரியங்களில் மட்டுமே கீழ்படிவை காண்பிக்கின்றார்கள். இந்தத் தியானத்திலே, வாலிபனை ஒரு உதரணத்திற்காக குறிப்பிடப்பட்டிருக்கின்றது. நாங்கள் யாவரும் தேவனுடைய சித்தம் எங்களில் நிறைவேறும்படிக்கு அவருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து அவற்றை கைக்கொள்ள வேண்டும். தேவன் நியமித்திருக்கின்ற சபையின் ஆளுகைக்கு கட்டுப்பட்டிருக்க வேண்டும். அப்படி நாம் கட்டுப்பட்டிருக்கும் போது, எங்கள் இருதயத்தை காண்கின்ற தேவன், நாம் அவரில் அன்பாய் இருக்கிறோம் என்பதை அறிவார்.

**யோவான் 14:23**

**இயேசு: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக் கொள்ளுவான்,**

**ஜெபம்:** இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற தேவனே, உம்முடைய வசனத்தின்படி நீர் நியமித்திருக்கும் சபையின் ஆளுகைகளுக்கு கீழ்ப்படியும்படி உணர்வுள்ள இருதயத்தை தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தர் எங்ளோடு கூட இருக்கின்றார்

யாக்கோபு என்னும் ஒரு மனிதனுக்கு பன்னிரண்டு குமாரர்கள் இருந்தார்கள். யாக்கோபின் முதிர்வயதிலே யோசேப்புத் தனக்குப் பிறந்ததினால், அவன் தன் குமாரர் எல்லாரிலும் யோசேப்பை அதிகமாய் நேசித்தான். யோசேப்பு பதினேழு வயதிலே தன் சகோதரருடனே ஆடுகளை மேய்த்து வந்தான். அவனுடைய சகோதரர் எல்லோரிலும் அவனைத் தங்கள் தகப்பன் அதிகமாய் நேசிக்கிறதை அவன் சகோதரர்கள் கண்டபோது, அவனோடே பட்சமாய்ப் பேசாமல் அவனைப் பகைத்தார்கள். அந்நாட்களிலே யோசேப்பு இரண்டு சொற்பனங்களைக் (கனவு) கண்டான். அவைகளின் கருப்பொருளாவது, யோ சேப்பின் பெற்றோரும், அவன் சகோதரர்கள் யாவரும் தரைமட்டும் குனிந்து அவனை வணங்குவது போன்ற காட்சியைக் கண்டான். யோசேப்பு, தான் கண்ட சொற்பனங்களை கூறியபோது, அதன் கருப்பொருளினிமித்தம் அவன் தந்தை அவனைக் கடிந்து கொண்டான். அவன் சகோதரர் அவன்மேல் பொறாமை கொண்டார்கள். ஒரு நாள், தன் சகோதரர்கள் ஆடு மேய்க்கச் சென்ற போது, அவர்களை சுகம் விசாரிக்கும்படி, அவன் தந்தை அவனை அவர்களிடம் அனுப்பினார். அவன் சகோதரர்களோ, அவனைப் பிடித்து, அவ்வழியாக வந்த இஸ்மவேலருடைய கையிலே அடிமையாக விற்றுப்போட்டார்கள். பின்பு, ஒரு மிருகம் அவனைப் பீறிப் போட்டது என அவன் தந்தையிடம் அறிவித்தார்கள். பிரியமானவர்களே, தேவனாகிய கர்த்தர்தாமே, தம்முடைய சித்தம் நிறைவேறத்தக்கதாக ஒரு பெரிதான வேலைக்காக யோசேப்பை முன்குறித்திருந்தார். ஆனால் அவன் குடும்பத்தாரோ அவனுக்குத் தடையாக வந்தார்கள். அந்நாட்களிலே பலர் அடிமைகளாக விற்கப்பட்டார்கள் வாங்கப்பட்டார்கள். அவனை பாதுகாக்க வேண்டிய சொந்தக் குடும்பமே அவனுக்கு விரோதமாக செய்த செய்கையானது தாங்கமுடியாத மிகவும் வேதனை தரும் செயலாகும். எனினும் தேவன் முன்குறித்ததை யாரால் தடுக்க முடியும்? தேவனுடைய கரம் யோசேப்போடே இருந்தது. எங்கள் சொந்த பந்தங்கள் காரணமின்றி பகைத்தாலும், சோர்ந்து போய் விடாதிருங்கள். எங்களை அழைத்த தேவன் எங்களோடு இருப்பதே எங்கள் வாழ்வின் மேன்மை. எனவே எங்களைச் சூழ இருப்பவர்களால், வாழ்வில் வரும் இன்னல்களைக் கண்டு தளர்ந்து போகாமல், தேவனுடைய சித்தம் எங்களில் நிறைவேற பொறுமையோடு காத்திருப்போம்.

**ஆதியாகமம் 39:2**

கர்த்தர் யோசேப்போடே இருந்தார், அவன் காரிய சித்தியுள்ளவனானான்

**ஜெபம்**: வாக்கு மாறாத தேவனே, உம்முடைய பார்வையிலே நான் விசேஷித்தவன், நீர் என்னோடு கூட இருப்பதே என்னுடைய மேன்மை என்பதை உணர்ந்து கொள்ளும் பாக்கியத்தை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

சனி | மாசி 15

📖 மாலை வாசகம் – எபேசியர் 6:5 – 8

# வேலை செய்யும் இடங்களிலே ஆசீர்வாதம்

நாங்கள் வேலை செய்யும் இடங்களின் சொந்தக்காரரோ அல்லது அதிகாரிகளோ தேவனாகிய கர்த்தரை அறியாதவர்களாக இருக்கலாம். ஆனால் அவ்விடங்களிலே எங்களது நற்சாட்சியான வாழ்க்கையின் நிமித்தம் கர்த்தர் நாம் வேலை செய்யும் இடத்தை ஆசீர்வதிப்பார். யோசேப்பு என்னும் இளைஞன், தன் சொந்த சகோதரர்களினாலே, அந்நிய தேசத்தவர்களின் கையிலே அடிமையாக விற்கப்பட்டு, எகிப்து தேசத்தின் பிரதானிகளில் ஒருவனாகிய போர்த்திபார் என்பவனின் வீட்டில் வேலைக்காக பணிக்கப்பட்டிருக்கின்றான். அவனுக்கு சொந்த பந்தங்கள் என்று கூற யாருமில்லை. தன் வாழ்க்கையே தனக்கு சொந்தமில்லை என்ற நிலையிலே ஒரு அந்நியனின் வீட்டிலே வேலை செய்து வந்தான். கர்த்தர் யோசேப்போடே இருந்ததால், அவன் செய்த எல்லா காரியங்களையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணினார். கர்த்தர் அவனோடே இருக்கிறார் என்றும், அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார் என்றும், அவன் எஜமானன் கண்டு: யோசேப்பினிடத்தில் தயவுவைத்து, அவனைத் தனக்கு ஊழியக்காரனும் தன் வீட்டுக்கு விசாரணைக்காரனுமாக்கி, தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான். பிரியமான சகோதர சகோதரிகளே, கர்த்தர் அவனோடு இருக்கும்படிக்கு அவன் கர்த்தருக்கு பிரியமுள்ளவனாக நடந்து கொண்டான். அதை அவனு டைய எஜமானன் காணும்படியாக சாட்சியான வாழ்க்கையை வாழ்ந்து காட்டினான். யோசேப்பின் நிமித்தம் கர்த்தரை அறியாத அந்நியனின் வீடு ஆசீர்வதிக்கப்பட்டது. பொதுவாக மனிதர்களின் வாழ்வில், தங்களுக்கு ஏற்படும் துன்பமான சூழ்நிலைகளில் தரித்து நின்று விடுகின்றார்கள். சில வேளைகளிலே சுய அனுதாபத்தை விரும்பி, “அந்த மனிதனால் தான் நான் இவ்வளவு கஷ்டப்படுகின்றேன்” என்று கூறிக் கொள்வார்கள். நாங்கள் நம்பியிருந்தவர்களால் ஏற்படும் அல்லது ஏற்பட்ட துன்பங்களை நினைத்து சுய அனுதாபத்துடன் வாழாமல், யோசேப்பைப் போல எதிரான சூழ்நிலைகளை கண்டு பயப்படாமல், எங்களைத் தாழ்த்தி, கர்த்தருக்கு கீழ்ப்படிவுள்ளவர்களாக நாங்கள் வேலை செய்யும் போது, கர்த்தர் எங்களை உயர்த்துவார். அதுமட்டு மல்ல நாங்கள் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமுள்ளவர்களாக மாற்றப்படுவோம்.

**ஆதியாகமம் 39:5**

கர்த்தர் யோசேப்பினிமித்தம் அந்த எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்தார்

**ஜெபம்**: பரலோக தந்தையே, எந்த சூழ்நிலையிலும் என் வாழ்க்கையைக் குறித்த சுய அனுதாபத்தால் அழிந்து போகாமல், உமக்குப் பிரியமான வாழ்க்கை வாழ உற்சாகமுள்ள ஆவியைத் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அநியாயங்களுக்கு உடன்படாதிருங்கள்

நாங்கள் வேலை செய்யும் இடங்களிலே எங்களுக்கு ஆதரவான சூழ்நிலைகள் இருப்பதையே நாங்கள் யாவரும் விரும்புகின்றோம். ஆனால், அங்கே பல சவால்களும், எதிர்ப்புக்களும் ஏற்படுவதுண்டு. அவ்விடங்களிலே சில வேளைகளிலே, சக ஊழியர்களினாலோ அல்லது அதிகாரத்திலுள்ளவர்களாலோ செய்யப்படும் அநீதியான செயல்கள் நம்மை பாதிப்படையச் செய்கின்றது. இதனிமித்தம் நாங்கள் எந்த காரணம் கொண்டும் பாவமான செயல்களுக்கு உடன்படலாகாது. அநியாயங்களுக்கு பங்காளிகளாக மாறிவிடக் கூடாது. அந்நிய தேசத்திலே வேலை செய்து வந்த இளைஞனாகிய யோசேப்பு ஒரு பெரிதான பயங்கரத்தை எதிர்நோக்க வேண்டியதாகயிருந்தது. யோசேப்பின் எஜமானனின் மனைவி யோசேப்பின் மேல் கண்போட்டு, தன்னோடு கூட பாவம் செய்யும்படி அவனை அழைத்தாள். ஆனால் யோசேப்போ, பின்விளைவுகள் எதைக் குறித்தும் அஞ்சாமல், பாவத்திற்கும் துரோகத்திற்கும் சற்றும் உடன்படாமல் தன் வாழ்க்கையை தூய்மையாகக் காத்துக் கொண்டான். எஜமானனின் மனைவி, யோசேப்பு தன் திட்டத்திற்கு உடன்படாததால், அவன்மேல் கோபம் கொண்டு, அவனுக்கெதிராக பொய் குற்றச்சாட்டை உண்டுபண்ணி. அவன் செய்யாத குற்றத்திற்காக, அவனை சிறைச்சாலையிலே போடுவித்தாள். நாம் வேலை செய்யும் இடங்களிலே, ஒருவேளை யோசேப்பை போன்ற சூழ்நிலைகள் நமக்கு ஏற்படாதிருந்தாலும், வேறுபட்ட அநியாயங்களும் பாவங்களும் செய்யக் கூடிய சூழ்நிலைகள் ஏற்படலாம். இன்றைய நாட்களிலே பல மனிதர்கள், வேலை போய்விடுமே என்று எண்ணி, தாங்கள் தேவன்பேரில் கொண்ட வைராக்கியத்தை சமரசம் செய்து விடுகின்றார்கள். சிங்கங் குட்டிகள் பட்டினி கிடந்து தாழ்ச்சியடைந்தாலும், கர்த்தரைத் தேடுபவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடுவதில்லை என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. யோசேப்போ, உதவியற்ற அந்நிய தேசத்திலே, தேவநீதியின் நிமித்தம், தனக்குண்டாயிருந்த நல்ல வேலையை இழந்து, சிறைச்சாலையிலே வாழ்கின்றான். யோசேப்பு தேவனுக்கு பயந்து வாழ்ந்ததனால், தேவன் அங்கே அவனோடு கூட இருந்தார். யோசேப்பைப் போல நாங்களும் வாழும்போது, தேவன் தாமே எங்களோடு இருந்து, எங்களையும் வழிநடத்திச் செல்வார்.

**ஆதியாகமம் 39:9**

இப்படியிருக்க, நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான்.

**ஜெபம்:** நீதியின் தேவனே, யாரும் அறியாத சூழ்நிலைகளில், நான் உமக்கு விரோதமாகப் பாவம் செய்யாதபடிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பொறுமையாய் இருங்கள், சேனைகளின் கர்த்தர் உங்களோடு இருக்கின்றார்

> **ஏசாயா 54:17**
>
> உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்.

கர்த்தர் யோசேப்புக்கு முன் குறித்த நாள் வந்தபோது, சிறைச்சாலையிலிருந்து, எகிப்தின் ராஜாவாகிய பார்வோனை சந்திக்கும்படிக்கு அரண்மனைக்கு கொண்டு போகப்பட்டான். எகிப்திலும், எல்லா தேசங்களிலும் ஏற்படவிருக்கும் கொடிய பஞ்சத்தை, தேவன்தாமே யோசேப்பு வழியாக பார்வோனுக்கு வெளிப்படுத்தினார். அதை மேற்கொள்ள வேண்டிய ஞானத்தையும் யோசப்புக்கு தேவன்தாமே கொடுத்திருக்கின்றார் என்பதை உணர்ந்த பார்வோன், யோசேப்பை எகிப்து தேசமனைத்திற்கும், தனக்கு அடுத்த அதிகாரியாக ஏற்படுத்தினான். சற்று சிந்தித்துப் பாருங்கள்! இளமைக் காலத்திலே வீட்டிலே துன்பம் ஏற்பட்டது. எகிப்திலே அநாதரவாக வேலை செய்யும் இடத்திலே செய்யாத குற்றத்திற்காக தண்டனையை பெற்றுக் கொண்ட யோசேப்பு, பொறுமையோடு தேவனைப் பற்றிக் கொண்டிருந்தான். தேவனாகிய கர்த்தர் முன்குறித்த திட்டம் அவன் வழியாக நிறைவேறும்படிக்குக் காத்திருந்தான். அவன் கர்த்தரிலே நிலைத் திருந்தபடியால், கர்த்தர் அவனோடு இருந்தார். ஈற்றிலே அவனுக்கு விரோதமாக, வீட்டிலும் வெளியிலும் உருவாக்கப்பட்ட எல்லா ஆயுதங்களும் செயல் இழந்து போய்விட்டது. தன்னை அந்நியருக்கு விற்றுப்போட்ட சகோதரர்களின் வம்சங்கள் பூமியிலே ஒழியாமலிருக்கவும், அவர்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய இரட்சிப்பினால் அவர்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவனின் கரத்தில், யோசேப்பு அருமையான பாத்திரமானான். தேவனுடைய வார்த்தை வல்லமையுள்ளது. அதை இறுகப் பற்றிக் கொள்ளுங்கள். அந்த வார்த்தையிலே நிலைத்திருங்கள். பிதாவாகிய தேவனுடைய சித்தம் உங்களில் நிறைவேறத்தக்கதாக இடங் கொடுங்கள். எதிர்ப்புக்கள், ஏளனங்களைக் கண்டு மனம் சோர்ந்து போய்விடாதிருங்கள். தேவன் வைத்த எல்லையைத் தாண்டி சென்றுவிடாதிருங்கள். வீட்டிலோ, வேலை செய்யும் இடங்களிலோ, வெளியிடங்களிலோ, எங்கு இருந்தாலும், பரிசுத்த வாழ்வை சமரசம் செய்யாதிருங்கள். சேனைகளின் கர்த்தர் உங்களோடு இருந்தால், நாங்கள் இந்த உலகத்திலே வாழ்ந்தாலும், இந்த உலக த்தை விட்டு கடந்து சென்றாலும் நாங்கள் அவரோடேகூட இருப்போம்.

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள தேவனே, என்னைக் குறித்த உம்முடைய திட்டம் என்னில் நிறைவேறும்படிக்கு, எந்த சூழ்நிலையிலும் நான் உம் வார்த்தையை பற்றிக்கொண்டு பொறுமையாக காத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக

நவீனமயமாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த உலகிலே நாகரீகம் என்ற போர்வையில், குடும்ப வாழ்வின் அடிப்படை உண்மைகள் மறுதலிக்கப்பட்டு வருகின்றது. பல நாடுகளிலே, தேவனுடைய கற்பனைகளுக்கு விரோதமான சட்டங்கள் ஏற்படுத்துவதை செய்திகள் வாயிலாக அறிந்து கொள்கின்றோம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்கு இசைவாக்கப்படுவதை பலர் தேசத்தின் அபிவிருத்தி என்றும் தாங்கள் குறுகிய மனப்பான்மை அற்றவர்கள் என்றும் கூறிக் கொள்கின்றார்கள். பாவமான செயல்களையும், யோக்கியமற்ற நடத்தைகளையும் கூட சர்வ சாதாரணமான செயல் என்றும், கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்பவர்களும் இவற்றை ஏற்றுக் கொள்ளும் காலமாக இருக்கின்றது. நீங்களோ, அந்தகார பாவ இருளினின்று ஆச்சரியமாக தேவ ஒளிக்கு அழைக்கப்பட்டவர்கள். உலகத்திற்கு வெளிச்சம் வீசும் சுடர்களாக ஏற்படுத்தப்பட்டவர்கள். தேவனுடைய ஜனங்கள் என்ற பெயரைத் தரித்தவர்கள். கிறிஸ்துவுக்குள் மறுபடி பிறந்தவர்கள். வேறுபிரிக்கப்பட்ட வாழ்க்கை வாழ அழைக்கப்பட்டவர்கள். மகா பரிசுத்தருடைய நாமத்தைத தரித்தவர்கள். இந்த உலகத்தின் போக்கிற்கு சற்றும் இடங் கொடாதிருங்கள். தேவனுடைய பரிசுத்தமானது காலத்திற்கு காலம், நாட்டிற்கு நாடு, இனத்திற்கு இனம், சூழ்நிலைக்கு சூழ்நிலை மாறுபடக்கூடியதல்ல. தேவன் பரிசுத்தராகவே இருக்கின்றார். இன்றைய நாட்களிலே, பல மனிதர்கள், தங்கள் சரீரத்தை ஒரு காட்சிப் பொருளாக வைத்துக் கொண்டு, அகம் தூய்மையாய் இருப்பதே அவசியமானது என்று கூறிக் கொள்கின்றார்கள். அகம் தூய்மையாக இருப்பது அவசியம் என்பது உண்மை. ஆனால், யாவரும் காணக்கூடிய புறத்தை நாகரீகம் என்று பரிசுத்த குலைச்சல் செய்கின்றவன், யாரும் காணாத அகத்தை எப்படி தூய்மையாக காக்க முடியும்? எனவே பிரியமானவர்களே, கர்த்தருடைய நாளுக்கென்று கறை திறை அற்றவர்களாக இருக்கும்படிக்கு எங்கள் ஆவி, ஆத்துமா, சரீரத்தை முற்றிலும் பரிசுத்தமாக காத்துக் கொள்வோம்.

**1 தெச 5:23**

சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக, உங்கள் ஆவி ஆத்துமா சரீரம்முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள தேவனே, பரிசுத்த வாழ்வு வாழும்படியாக என்னை வேறு பிரித்தீர். இந்த உலக போக்கின்படியல்ல, உம்முடைய வார்த்தையின்படி பரிசுத்த வாழ்வு வாழும்படி என்னை உணர்வுள்ளவனா(ளா)க மாற்றும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# என் அழைப்பின் நோக்கம் என்ன?

“நான் வளர்ந்து எப்படியாவது ஒரு தீயணைப்பு படை வீரனாக வருவேன்” என்று ஒரு மகன் தன் தாயாரிடம் கூறினான். தாயார் தன் மகனை நோக்கி: “நீ ஏன் ஒரு தீயணைப்பு படைவீரனாக வருவதற்கு ஆசைப்படுகின்றாய்” என்று கேட்டாள். நாட்டிலே அவர்களுக்கு நல்ல மதிப்பு உண்டு, நல்ல சம்பளம் கிடைக்கின்றது என்று ஆய்வுகள் வழியாக அறிந்து கொண்டேன் என்று கூறினான். தாயாரோ, “முக்கியமாக நீ மக்களுக்கு தியாகத்துடன் சேவை செய்ய வேண்டும் என்ற மனநிலையுடையவனாக இருக்க வேண்டும்” என்று பதில் கூறினார். ஆம் பிரியமானவர்களே, இந் நாட்களிலே அதிகப்படியான சிறார்கள், நான் வைத்தியராக, ஆசிரியராக, தாதியாக, பொலிசாராக வரவேண்டும் என்ற ஆசையின் அடிப்படை நோக்கம் மாற்றமடைந்து கொண்டே போகின்றது. ஒரு மணித்தியாலத்திற்கு நான் எவ்வளவு உழைக்கலாம், எப்படிப்பட்ட இலகுவான வாழ்க்கை வாழலாம், எத்தனை வயதிலே ஓய்வு எடுக்கலாம், உலகத்தை சுற்றி எங்கெங்கே உல்லாசப் பயணங்கள் போகலாம், என்பதே பிள்ளைகளின் தீர்மானங்களின் முதன்மைக் காரணிகளாக இருக்கின்றது. எங்களுடைய சுகவாழ்வை குறித்த கரிசனை தவறானது அல்ல ஆனால் சேவை மனப்பான்மை, தியாக மனப்பான்மை, பொது நலன் கருதி வாழும் வாழ்கை மனிதர்கள் மத்தியிலே குறைந்து கொண்டே போகின்றது. கடைசி நாட்களிலே, மனிதர்கள் சுயநலமுடையவர்களாகவும், பணப்பிரியர்களாகவும், நன்றியறியாதவர்களாயும், சுகபோக பிரியமுடையவர்களாகவும் இருப்பார்கள் என்று தீமோத்தேயு என்னும் இளமையான ஊழியருக்கு அப்போஸ்தலராகிய பவுல் அறிவுரை கூறியிருக் கின்றார். இது இன்றைய உலகம் போகின்ற போக்காக இருக்கின்றது. ஆனால், நாங்களோ அல்லது எங்கள் பிள்ளைகளோ இவைகளுக்கு உடன்பட்டிருக்க வேண்டியதில்லை. முதலாவதாக இந்தப் பூமியிலே தங்கள் வாழ்க்கையின் கருப்பொருளைக் குறித்து பெற்றோரின் மனநிலை மாற்றமடைய வேண்டும். பின்பு, தாமதிக்காமல், தங்கள் நாளாந்த நடைமுறை வாழ்க்கையினாலே, மனித வாழ்வின் முக்கிய அம்சங்களை பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். இந்த உலகத்தின் போக்கின்படி, உலக ஆய்வுகளின்படி வாழாமல், தேவனுடைய வார்த்தையின்படி எங்கள் மனம் ஒவ்வொருநாளும் நன்மை யான எண்ணங்களினாலும் செய்கைகளினாலும் நிறைய வேண்டும்.

**ரோமர் 12:2**

**நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்,**

**ஜெபம்**: அன்பின் பரலோக தந்தையே, நாங்கள் வாழ்வடையும்படிக்கு தன் ஜீவனையே தியாகமாக கொடுத்த மீட்பராகிய இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றும் வாழ்க்கை வாழ என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வாழ்க்கையின் தீர்மானங்கள்

குடிவரவு, குடியகழ்வு போன்ற நிகழ்வுகள் இன்றைய உலகிலே அதிகதிகமாக நடைபெற்று வருகின்றது. சிலர் தங்கள் சொந்த விருப்பத்தின்படி தாங்கள் குடியிருக்கும் தேசத்தைவிட்டு இன்னுமொரு தேசத்திற்கு செல்கின்றார்கள். வேறு சிலர் பல சூழ்நிலைகள் காரணமாக வேறு தேசங்களுக்குச் செல்வதற்கு நிர்பந்திக்கப்படுகின்றார்கள். இவ்வண்ணமாக, பல காரணங்களுக்காக ஒரு ஊரை விட்டு இன்னுமொரு ஊருக்கும் ஒரு வீட்டைவிட்டு இன்னுமொரு வீட்டிற்கும், ஒரு வேலையைவிட்டு இன்னுமொரு வேலைக்கும், ஒரு பாடசாலையை விட்டு இன்னுமொரு பாடசாலைக்கும் செல்கின்றார்கள். பலர் இப்படியாக வாழ்க்கையை மாற்றியமைக்கும் நிகழ்வுகளை, சற்றும் சிந்திக்காமல், தேவனுடைய சித்தம் என்ன என்பதை அறியாமல், துரிதமாக தீர்மானிக்கின்றார்கள். இவைகளினால் பல எதிரடையான பின்விளைவுகளை எதிர்நோக்குகின்றார்கள். இவைகளின் மத்தியில் தேவனை நோக்கிப் பார்க்கும்போது, அவர் அவர்களுடைய மீறுதல்களுக்கு தக்கதாக நீதியை சரிக்கட்டாமல், தம்முடைய இரக்கத்தின் நிமித்தம் விடுதலை அளிக்கின்றார். மெய்யான தேவன் யார் என்று அறிந்த பின்பும், நாங்கள் திரும்பத் திரும்ப மெய்யான தேவனை அறியாதவர்கள் போல, எங்கள் சொந்த உணர்வுகளின்படி வாழ்வின் தீர்மானங்களை எடுக்கக்கூடாது. “மேலும், நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒருவருஷம் தங்கி, வியாபாரஞ்செய்து, சம்பாத்தியம்பண்ணுவோமென்கிறவர்களே, கேளுங்கள். நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப்போலிருக்கிறதே. ஆதலால்: ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும்” என்று பரிசுத்த வேதாகமம் எங்களுக்கு அறிவுரை கூறுகின்றது. எனவே, தேவன் எங்கள் வாழ்க்கையைக் குறித்து ஒரு அழகான திட்டத்தை வைத்திருக்கின்றார் என்பதை உணர்ந்து, எந்த ஒரு திட்டத்தையும் முன்னெடுத்துச் செல்ல முன்பு, பொறுமையோடு தேவனுடைய சமுகத்திலே ஜெபத்திலே தரித்திருந்து தேவ சித்தத்தை அறிந்து கொள்ள வேண்டும்.

**யாக்கோபு 4:15**

ஆதலால்: ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும்.

**ஜெபம்**: பரலோக தேவனே, என் வாழ்வில் எந்த தீர்மானங்களை எடுக்கும் முன்பும், உம்முடைய சித்தத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்னும் உணர்வுள்ள இருதயத்தைத் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இக்கட்டும் நெருக்கமும் நம்மைச்சூழ்ந்து கொள்ளும் போது

> **1 சாமுவேல் 30:6**
>
> தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்.

தாவீது என்னும் இளைஞனை கொன்று போடும்படி, அவனுடைய தேசத்தின் ராஜா அவனை பின்தொடர்ந்த நாட்களிலே அவன் மலைகளிலும், கெபிகளிலும், வனாந்தரத்திலும் தன்னோடு இருந்த ஜனங்களோடும் வாசம் செய்து வந்தான். ஒரு சமயம், தாவீதும் அவனோடிருந்த புருஷர்களும் இல்லாத போது, அமலேக்கியர் அங்கே வந்து, அங்கிருந்த ஸ்திரீகளையும் சிறியவர்களையும் பெரியவர்களையும் சிறைப்பிடித்து, தங்கள் வழியே போய் விட்டார்கள். தாவீதும் அவன் மனுஷரும் அந்தப் பட்டணத்திற்கு வந்த போது, இதோ, அது அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டது என்றும், தங்கள் மனைவிகளும் தங்கள் குமாரரும் தங்கள் குமாரத்திகளும் சிறைபிடித்துக் கொண்டுபோகப்பட்டார்கள் என்றும் கண்டார்கள். அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த ஜனங்களும் அழுகிறதற்குத் தங்களில் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள். தாவீது மிகவும் நெருக்கப்பட்டான் சகல ஜனங்களும் தங்கள் குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசமானதினால், தாவீதைக் கல்லெறியவேண்டும் என்று சொல்லிக்கொண்டார்கள் தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டான். பிரியமானவர்களே, இதற்கொத்ததான இக்கட்டான சூழ்நிலைகள் மனிதர்களுடைய வாழ்க்கையில் உண்டாகும் போது, பதற்றமடைந்து, தங்கள் கோபத்தை தீர்க்கும்படி, தங்கள் உணர்வுகளின்படி சண்டைகளையும் கலவரங்களையும் ஆரம்பித்து விடுகின்றார்கள். ஆனால் தேவ மனுஷனாகிய தாவீதோ, கர்த்தரை நோக்கி: நான் அந்தத் தண்டைப் பின் தொடரவேண்டுமா? அதைப் பிடிப்பேனா? என்று கேட்டான். அதற்கு அவர்: அதைப் பின் தொடர் அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக்கொள்வாய் என்றார். அதன்படியே, தேவனுடைய அனுக்கிரகம் அவனோடு இருந்ததால், அவன் அமலேக்கியரை முறியடித்து இழந்து போன யாவற் றையும் மீட்டுக் கொண்டான். இப்படியாக எங்கள் வாழ்வின் இக்க ட்டான சூழ்நிலைகளை எப்படி ஜெயிக்க முடியும் என்று, வேதத்த் திலே மேகம் போன்ற திரளான சாட்சிகள் உண்டு. எனவே வேதத்தை தினமும் வாசியுங்கள், வேத வார்த்தைகளின் வழியாக தேவன் உங்களை வழிநடத்திச் செல்வார்.

> **ஜெபம்**: வழிநடத்தும் வல்ல தேவனே, இக்கட்டும் நெருக்கமும் என்னைச் சூழ்ந்து கொள்ளும் போது, உம்முடைய பிரமாணங்களை பற்றிக் கொள்ளும் இருதயத்தை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ளுங்கள்

ஒரே குடும்பத்தை சேர்ந்த பிள்ளைகள் மத்தியிலே சின்ன வயதிலிருந்தே கருத்து வேறுபாடுகள், வேற்றுமைகள் இருந்து வருகின்றது. நாங்கள் ஒரு குடும்பத்தார் எனவே எங்கள் ஐக்கியத்தை காத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் பிள்ளைகள் வளரும் போது, வேற்றுமைகளும் வளர்ந்து கொண்டு செல்கின்றது. ஒரே கூரையின் கீழ் வாழ்ந்தாலும், கருத்து முரண்பாடுகளால் உண்டாகக் கூடிய பிரி வினைகளை தவிர்த்துக் கொள்ளும்படியாக, "அது அவளுடைய வாழ்க்கை அவள் எப்படியாவது வாழட்டும்" "அவன் எக்கேடு கெட்டால் எனக்கு என்ன?" என்று அவரவர் தன் தன் அலுவல்களை பார்க்கும் கலாச்சாரத்தை மனிதர்கள் தங்களுக்கென உருவாக்கிக் கொள்கின்றார்கள். இப்படிப்பட்ட எண்ணத்தோடு ஒன்றாய் வாழும் குடும்பம் ஏற்கனவே தனக்குள் பிரிந்திருக்கின்றது. இதற்கு ஒத்த கலாச்சாரத்தையே பல மனிதர்கள் சபை ஐக்கியத்திலே இருக்கும்படியாக விரும்புகின்றார்கள் அல்லது அப்படிப்பட்ட கலாச்சாரத்தையுடைய சபையில் அங்கத்தவர்களாக இருக்கும்படிக்கு விரும்புகின்றார்கள். எங்களுக்கு ஒரே மெய்யான தேவன் இருக்கின்றார். நாங்கள் தாபரிக்கும் ஊராகிய ஒரே பரலோகம் எங்களுக்கு உண்டு. எங்கள் விசுவாசம், மனந்திரும்புதல், பாவ மன்னிப்பு, மனந்திரும்பி எடுக்கும் முழுக்கு ஞானஸ்நானம், தேவ கிருபை, தேவனுடைய பரிசுத்தம் என்பவைகளில் எந்த வேற்றுமையும் இல்லை. கர்த்தராகிய கிறிஸ்துவின் பிறப்பு, அவருடைய பரித்த வாழ்வு, கிறிஸ்துவின் திருப்பணி, அவரின் பாடுகள், சிலுவை மரணம், உயர்த்தெழுதல், பரம் ஏறுதல், பரிசுத்த ஆவியின் அபிஷேகம், கிறிஸ்துவின் வருகை, இப்படியாக இவைகளில் எந்த மாறுதலும் இல்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகின்ற அறிவின் மேன்மைக்காக இந்த உலகத்தில் மிகுதியானவைகளை நஷ்டமும் குப்பையுமென தள்ளிவிட்டு, கிறிஸ்துவின் சாயலிலே வளர வேண்டும். ஆதலால் பிரியமானவர்களே "நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்."

**எபேசியர் 4:3**

**சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்.**

**ஜெபம்**: அன்பின் பரலோக தந்தையே, ஒன்றான மெய் தேவனாகிய உம்மையும், இயேசு கிறிஸ்துவையும் அறிகின்ற அறிவில் வளர்ந்து பெருகுவதையே என் நோக்கமாகக் கொண்டு வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நிறைவான வளர்ச்சியை நோக்கி

நாங்கள் ஒருமனதோடும் ஒற்றுமையோடும் இசைந்த ஆத்துமாக்க ளாய், பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை எங்கள் வாழ்வில் நிறை வேற்ற வேண்டும் என்னும் அறிவுரையோடு மட்டும் நின்றுவிடாமல், அதை நிறைவேற்றி முடிக்க தேவையான யாவற்றையும் பிதாவாகிய தேவன் தாமே அனுக்கிரகம் செய்திருக்கின்றார். எங்களோடு, எங் களுக்குள் என்றென்றும் வாசம்பண் ணும்படிக்கும், எல்லா வேளைகளிலும் எங்களை வழிநடத்திச் செல்லும்படிக் கும், தேற்றரவாளராகிய தூய ஆவி யானவரை எங்களுக்கு ஈவாக கொடு த்திருக்கின்றார். இயேசு கிறிஸ்து எப் படியாக இந்த உலகத்திலே வாழ்ந்து காட்டினாரோ, அத்தகைய நிறைவான வளர்ச்சியடையவும், கிறிஸ்துவின் நற் செய்தியை அறிவிக்கும்படிக்கும், சபை யானது பக்திவிருத்தியடையும்படிக்கு, தேவன்தாமே, சிலரை அப்போஸ்தல ராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். கிறிஸ்து வின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணமடையும்படிக்கு, தூய ஆவியானவர் எங்களோடு இருக்கின்றார், கிறிஸ்துவின் சரீர மான சபையில் அங்கத்தவர்களாக இருக்கும் நாங்கள் பக்திவிரு த்தியடையும்படிக்கு ஊழியர்களை கொடுத்திருக்கின்றார். நாங்கள் ஒரு ஆவிக்குரிய சபையில் அங்கத்தவராக இணைந்து கொள்ளும்படி தீர்மானம் எடுத்தபின்பு, அவ்விடத்திலே, பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும், மேய்ப்பர் வழியாக தேவன் கூறும் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும். நாங்கள் கலகங்களுக்கும் பிரிவினைகளுக்கும் காரணராக இருக்கக்கூடாது. ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்பதிலும், ஒருவரை ஒருவர் மன்னிப்பதிலும் முந்திக் கொள்ள வேண்டும். தேவன் எங்கள் மேல் நீடிய பொறுமையுள்ளவராக இருக்கின்றார். மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போத கமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அங்கு மிங்குமாக அலைகிறவர்களாயிராமல், நானே எனக்கு மேய்ப்பன் என்ற எண்ணத்தோடு வாழாமல், அன்புடன் சத்தியத்தைக் கைக் கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலும், அவருடைய சாயலிலே வளர்ந்து பெருகுவோம்.

**எபேசியர் 4:15**

**அன்புடன் சத்தியத்தைக் கைகொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்.**

**ஜெபம்**: அன்பின் தேவனே, சபை பக்கதிவிருத்தியடையும்படிக்காய், உம்முடைய வார்த்தையின்படி நான் கீழ்ப்படிவுள்ளவனா(ளா)க சாட்சி யுள்ள வாழ்க்கை வாழ என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ ஆலோசனைகளுக்கு கீழ்ப்படியுங்கள்

"ஒரு வாலிபன் நெடுஞ்சாலையிலே தன் வாகனத்தை அதி வேகமாக ஓட்டிச் சென்றதன் நிமித்தமாக பொலிசார் அவனை தடுத்து நிறுத்தி, சட்டப்படி செலுத்த வேண்டிய அபராதத்தை வழங்கினார்கள். குடும்ப வைத்தியரிடம் பரிசோதனைக்காக சென்ற தாயார் ஒருவருக்கு, சில நோயின் அறிகுறி தெரிவதாகவும், அந்த நோயிலிருந்து தப்பித்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும் என்று அறிவுரைகளைக் கூறி, சில மருந்துகளையும் வைத்தியர் வழங்கினார். பாடசாலையொன்றிலே, தன் பாடங்களை ஒழுங்காக கற்காமலும், வீட்டு வேலைகளை செய்யாமலும் இருந்த மாணவன் ஒருவனை வகுப்பு ஆசிரியர் கண்டித்துப் பேசினார்." இவை யாவும் இந்த உலகிலே பாதுகாப்பாக, சுகமாக, செழிப்பாக வாழ்வதற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒழுங்கு முறைகள். நல்வாழ்வை விரும்பும் எந்த மனிதனும் மேற்கூறியவைகளைக் குறித்து எந்த ஆட்சேபனையையும் தெரிவிப்பதில்லை. நாங்களும் இந்த ஒழுங்குகளை கடைப்பிடிப்பதற்கு எதிர்த்து நிற்பதில்லை. பரலோக யாத்திரிகளாக கொஞ்சக் காலம் இந்த பூமியிலே வாழ்ந்து கொண்டிருக்கும் எங்களுக்கு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே பிரதான மேய்ப்பனாக இருந்து, எங்கள் ஆன்மீக வாழ்வை நாங்கள் கெடுத்துப் போடாதபடிக்கு எங்களை வழிநடத்திச் செல்கின்றார். தம்முடைய பணியை நிறைவேற்றும்படிக்கு மேய்ப்பர்களையும் உதவி ஊழியர்களையும் சபையில் ஏற்படுத்தியிருக்கின்றார். எங்கள் ஆத்துமா அழிந்து போகாதபடிக்கு, சில வேளைகளிலே, தேவ பிரமாணங்களை மீறும் போது பொலிசாரைப் போலவும், ஆன்மீக நோயின் அறிகுறிகள் தென்படும் போது வைத்தியரைப் போலவும், வாழ்வின் வழிகளை கற்றுக் கொடுக்கும் போது ஆசிரியரைப் போலவும் மேய்ப்பர் செயற்படுகின்றார். இது என் தனிப்பட்ட வாழ்வு என்று சொல்லி உங்கள் இருதயத்தை கடினப்படுத்தாமல், தேவ ஆலோசனைகளுக்கு கீழ்ப்படியுங்கள். உங்களுக்கு தேவ ஆலோசனைகளை கூறுகின்றவர்களை மதித்து, கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளுங்கள். அப்படி செய்யும் போது கர்த்தர் உங்களில் பிரியமாய் இருப்பார்.

**1 தெச 5:12**

**அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணை செய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து,**

**ஜெபம்:** வழிநடத்தும் நல்ல பிதாவே, எங்களை வழிநடத்தும்படி நியமிக்கப்பட்ட ஊழியர்களை மதித்து, அவர்கள் கூறும் தேவ ஆலோசனைகளுக்கு கீழ்ப்படியும் இருதயத்தை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இலக்கின் மேல் கண்கள்

ஒரு கிராமத்திலே வாழ்ந்து வந்த மனிதன், தன் சரீரத்திலே ஏற்பட்ட சில பெலவீனங்களின் நிமித்தம், கிராமத்திலுள்ள பரிகாரியை காணும்படியாக சென்றிருந்தான். பரிகாரி, அவனுடைய உடல்நிலையை சோதித்துப் பார்த்தபின்பு, "கடந்த முறை நீ இங்கு வந்த போது, நான் உனக்கு கூறிய சுகாதார ஒழுங்கு முறைகளை கடைப்பிடித்தாயா? நான் உனக்கு கொடுத்த மருந்துகளை ஒழுங்காக எடுத்தாயா? ஏன் நீ என்னை சீக்கரமாய் வந்து சந்திக்கவில்லை" என்று சற்று கடினமான தொனியிலே அவனை கண்டித்துப் பேசிவிட்டார். பரிகாரி கூறிய விடயங்கள் உண்மையாக இருந்தாலும், அவர் பேசிய தொனியையிட்டு மிகவும் கோபமடைந்தான். தன் சரீரத்திலே இருக்கும் நோயை குறித்தும், அதற்கு செய்ய வேண்டிய பரிகாரத்தைக் குறித்தும் சிந்தனையில்லாமல், அந்த பரிகாரியின் பேச்சுத் தொனியைக் குறித்தே அதிகமாக அலட்டிக் கொண்டிருந்தான். அவனுடைய மனைவியோ அந்த மனிதனை ஆறுதல் படுத்தி, அந்தப் பரிகாரி சாந்தமாக பேசியிருந்தால் எல்லாம் நலமாக இருந்திருக்கும் ஆனால் எனக்கும் பிள்ளைகளுக்கும் பரிகாரியின் தொனியைக் குறித்த கரிசனையைவிட உங்கள் நோய் மாற வேண்டும் என்பதே எங்கள் எண்ணமும் ஏக்கமுமாயிருக்கின்றது. எனவே அவர் கொடுத்த மாத்திரைகளை சற்று உட்கொள்ளுங்கள் என்று தயவாக கேட்டுக் கொண்டாள். ஆம் பிரியமானவர்களே, பல வேளைகளிலே நாமும் காரியத்தின் கருப்பொருளை மறந்து, சூழ்நிலையைக் குறித்து அதிக கவனமுள்ளவர்களாக மாறிவிடுகின்றோம். இந்த உலகத்தின் பாவத்தை போக்குவதற்காக இயேசு கிறிஸ்து தம்மைத் தாமே பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டியது, பிதாவாகிய தேவனுடைய சித்தமாயிருந்தது. ஆனால், அதை நிறைவேற்றி முடிக்க இவ்வளவு அவமானத்தையும் நிந்தையான பேச்சுக்களையும் சகிக்க வேண்டுமா? ஆம், இயேசு அவை யாவற்றின் மத்தியிலும், பிதாவின் சித்தத்தை தன் வாழ்வில் நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்பதை தன் இலக்காக வைத்து, அதை சம்பூரணமாக நிறைவேற்றி முடித்தார். எனவே சூழ்நிலைகளினால் எங்கள் மனதைக் குழப்பிக் கொண்டு, இழுப்புண்டு போகாமல், எங்கள் கண்களை எப்போதும் இலக்கின் மேல் பதிய வைத்து, பொறுமையோடே ஓடக்கடவோம்.

**பிலிப்பியர் 3:14**

கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித்தொடருகிறேன்.

**ஜெபம்**: பரலோக தேவனே, இந்த உலகத்தில் உண்டாகும் அவமானங்கள் நிந்தையான பேச்சுக்களால் சோர்ந்து போகாமல், பரலோக இலக்கை நோக்கி என் பிரயாணத்தை தொடர என்னை பெலப்படுத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்துவின் பாடுகளின் தியானம்

சமுதாயத்தினால் ஒடுக்கப்பட்டு, பாவ சாபத்தின் அடிமைத்தன கட்டுக்களிலே மாய்ந்து கொண்டிருக்கும் ஜனங்கள், ஒரு மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல அலைந்து திரிவதை கண்ட கருணைத் தெய்வமாகிய கர்த்தராகிய இயேசு, அவர்கள் மேல் மனம் இரங்கி, அவர்கள் பாவங்களை மன்னித்து, அடிமைத்தன கட்டுக்களிலிருந்து அவர்களை விடுவித்து, புது வாழ்வு கொடுத்தார். சர்வவல்லமையுள்ளவராகிய இயேசு கிறிஸ்து, தம்மை எதிர்ப்பவர்களை அழித்துப் போடாமல், அவர்கள் அறியாமையை மன்னித்து, அவர்கள் மனந்திரும்பும்படி அவர்கள் மேல் நீடிய பொறுமையுள்ளவராக இருந்தார். அன்று மட்டுமல்ல இன்றுவரைக்கும் தம் மன உருக்கத்தையும் நீடிய பொறுமையையும் மனித குலத்திற்கு அனுக்கிரகம் செய்து வருகின்றார். நன்மை செய்யும்படி, தம்மைத் தாழ்த்தி, இவ்வுலகிற்கு வந்த இயேசுவுக்கோ: மதத் தலைவர்கள், அதிகாரிகள், பெருந் தொகையான ஜனங்கள் தீமை செய்தார்கள். தம்மை: அடித்தவர்கள், காயப்படுத்தியவர்கள், சிலுவையிலே அறைந்தவர்கள், அவமதித்தவர்கள், நகைத்தவர்கள் நிந்தையான பேச்சுக்களை பேசியவர்கள் யாவரின் பாவத்திற்காகவும் மன்னிப்பு வழங்கும்படியாக பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்று வேண்டிக் கொண்டார். இப்படிப்பட்ட சுபாவமுடையவர்களாக நாம் மாற வேண்டும் என்ற மனநிலையுடனே, இந்நாட்களிலே கிறிஸ்துவின் பாடுகளை தியானம் செய்ய வேண்டும். “கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவை யின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.” ஆதலால் பிரியமானவர்களே, எங்களுக்கு ஏற்படும் எதிரிடையான சூழ்நிலைகளில் கிறிஸ்துவின் சுபாவங்கள் எங்களிலே வெளிப்படத்தக்கதாக எங்கள் மனநிலையை சீர்படுத்துவோம். எங்களைத் தாழ்த்துவோம். தேவ வசனத்திற்கு கீழ்ப்படிவோம்.

**பிலிப்பியர் 2:5**

**கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது;**

**ஜெபம்:** அன்புள்ள பரலோக பிதாவே, உம்முடைய திருக்குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் சாயலிலே நாள்தோறும் வளர்ந்து பெருகும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பட்சமாய் நடந்து கொள்ளுங்கள்

தேவ ஊழியராகிய பவுல் என்பவரின் இரண்டாவது சுவிசேஷ பிரயாணத்தின் போது, அவரும் அவரோடு கூட இருந்த மற்றய ஊழியர்களும் தெசலோனிக்கே என்ற பட்டணத்திற்கு சென்று மீட்பின் நற்செய்தியை அறிவித்தார்கள் "யூதர்களில் சிலரும், பக்தியுள்ள கிரேக்கரில் திரளான ஜனங்களும், கனம்பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் விசுவாசித்து, பவுலையும் சீலாவையும் சேர்ந்துகொண்டார்கள்." நற்செய்தி அறிவிப்பின் பிரதானமான நோக்கம், ஒருவரும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பதாகும். இதை நன்றாக அறிந்திருந்த ஊழியராகிய பவுல், தெசலோனிக்கே பட்டணத்திலே புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களுடைய இரட்சிப்பு நிறைவேறத்தக்கதாக, தன் உயிரையும் தியாகமாக கொடுக்க ஆயத்தமாக இருந்தார். மனிதர்களால் உண்டாகும் மகிமையை அவர் தேடவில்லை. அந்த ஜனங்களுக்கு எந்த விதத்திலும் பாரமாக இருக்கவும் விரும்பவில்லை. அவர்களிடத்தில் பட்சமாய் நடந்து, பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல, தெசலோனிக்கேயிலுள்ள புதிய விசுவாசிகள்மேல் வாஞ்சையாயிருந்து, தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, அவர்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியையும் தேறுதலையும் எச்சரிப்பையும் சொல்லி வந்தார். தேவ ஊழியராகிய பவுல் தான் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்றுவதைப் போலவும், கிறிஸ்துவின் அச்சடையாளங்களை தன்னில் தரித்திக் கொண்டிருக்கின்றதைப் போலவும், நீங்களும் என்னைப் பின்பற்றுங்கள் என்று அறிவுரை கூறியிருக்கின்றார். அதாவது, இந்த அறிவுரை ஊழியர்களுக்கு மட்டுமல்ல, கிறிஸ்துவுக்குள் தேறினவர்கள் யாவரும் இந்த சிந்தையோடே இருக்க வேண்டும். எச்சரிப்பு, கண்டிதம், ஒழுக்கம் யாவும் உண்டு. ஆனால் அவை யாவற்றிற்கும் மேலாக, புதிதாய் பிறந்த குழந்தை வளர்ந்து தேறும்வரைக்கும், ஒரு தாய் எப்படி அந்த குழந்தையை காப்பாற்றுகின்றாளோ, நாங்களும் புதிதாய் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் மேல் பட்சமாய் நடந்து கொண்டு, அவர்கள் கிறிஸ்துவை அறிகின்ற அறிவில் வளர்ந்து பெருகும்படிக்கு அவர்கள் மேல் நீடிய பொறுமையுள்ளவர்களாக இருந்து, அவர்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்திச் செல்ல வேண்டும்.

**1 தெச 2:7**

**உங்களிடத்தில் பட்சமாய் நடந்துகொண்டோம் பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல,**

**ஜெபம்:** அன்புள்ள பிதாவே, நீர் என்மேல் காட்டி வருகின்ற அன்பு அளவற்றது. அது போல நானும் மற்றவர்கள்மேல் தயவாயும் பட்சமாயும் நடந்து கொள்ள என்னை உணர்வுள்ளவனா(ளா)க்குவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனுக்கு உகந்த தானதர்மங்கள்

குறிப்பாக கிறிஸ்துவின் பாடுகளை நினைவுகூரும் நாட்களிலே, அநேகர்; ஏழைகள், எளியவர்கள், திக்கற்றவர்கள், அநாதைகளை ஆதரிக்கும்படிக்கு, பலவிதமாக நற்கிரியைகளை செய்கின்றார்கள். வேறு சிலர், தங்கள் சிக்கனமான வாழ்க்கையிலே, பல ஒறுத்தல்கள் தியாகங்களை செய்து, அவ்வண்ணமாக சேமித்த பணத்தின் வழியாக உதவிகளை செய்கின்றார்கள். இவை யாவற்றிலும் தேவன் பிரியமாயிருக்கின்றார். எங்கள் அருமை இரட்சகராகிய இயேசுவும் இந்த பூவுலகில் வாழ்ந்த நாட்களிலே நன்மை செய்கின்றவராய் சுற்றித்திரிந்தார். எனவே இப்படிப்பட்ட நற்கிரியைகளை உற்சாகமுள்ள இருதயத்தோடு நடப்பியுங்கள். அதே வேளையிலே உங்கள் உடன் சகோதர சகோதரிகளுடனும், மற்றய விசுவாசிகள் மத்தியிலும் உங்கள் நற்சுபாவங்களை, இந் நாட்களிலே அதிகமாக வளருங்கள். எடுத்துக்காட்டாக, உங்களுக்கு எதிராக குற்றம் செய்தவர்களை மன்னித்து விடுங்கள். ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள். உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள், ஆசீர்வதிக்கவேண்டியதேயன்றி சபியாதிருங்கள். தானதர்மங்கள் நல்லதுதான். ஆனால் ஒரு மனிதனுடைய மனதிலே கசப்பு, கோபம் மூர்க்கம், தகாதவைகளை பேசுதல் போன்றவைகள் இருதயத்திலே இருக்கும் போது, அவன் அவைகளைக் குறித்த உணர்வு அற்றவனாக வாழும் போது, அவன் செய்யும் தானதர்மங்கள் தேவனுக்கு உகந்த வாசனையாக இருக்காது. தேவனுடைய அன்பு இருக்கும் இருதயத்தில் கசப்பு, கோபம் மூர்க்கம், தகாதவைகளை பேசுதல் போன்றவைகளுக்கு இடமில்லை. கசப்பு, வன்மம், பகை, வைராக்கியம் குடி கொண்டிருக்கும் இருதயத்தில் தேவ அன்புக்கு இடமில்லை. “எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை.” என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. எனவே முதலாவதாக நாங்கள் கசப்பு, கோபம் மூர்க்கம், தகாதவைகளை பேசுதல் போன்றவற்றிலிருந்து விடுதலையாக வேண்டும் என்ற மனநிலை உடையவர்களாக, இந்நாட்களிலே எங்கள் வாழ்க்கையை தேவனிடத்தில் ஒப்புக் கொடுப்போம்.

**எபேசியர் 4:31**

**சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது.**

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள தேவனே, முதலாவதாக என்னுடைய இருதயம் உமக்கு உகந்த காணிக்கையாக இருக்கும்படிக்கு மாம்சத்தின் கிரியைகளை விட்டு விடுதலையாகும்படிக்கு என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மற்றவர்களை புரிந்து கொள்ளுங்கள்

தன் இளமைக் காலங்களில் இருந்து தன் பெற்றோரை நேசித்து வந்த பெண்மணி, தன்னையும் தன் தம்பிமாரையும் வளர்க்க, பெற்றோர் பல தியாகங்களை செய்திருக்கின்றார்கள் என்ற ஓரளவு உணர்வு அவளுக்குள் இருந்தது. ஆண்டுகள் கடந்து சென்று, தனக்கென்று ஒரு குடும்பம் வந்த பின்பு, தான் கடந்து போகும் ஒவ்வொரு நிலைகளையும், அதன் பாடுகளையும் அனுபவ ரீதியாக கடந்து செல்லும் போது, தன் அம்மா அப்பா இவ்வளவாக தங்களுக்காக பிரயாசப்பட்டிருக்கின்றார்கள் என அவள் உள்ளத்திலே நன்றி பெருகிற்று. இது பெற்றோரின் கடந்த காலத்தைக் குறித்த உணர்வு. ஆனால், இப்போது பெற்றோர் வயோதிபத்தை அடைந்து கொண்டிருக்கின்றார்கள், ஆனால் அந்த மகளுக்கோ வயோதிபம் எப்படி இருக்கும் என்ற அனுபவம் இல்லாததால், பெற்றோரின் தற்போதைய நிலையை சரியாக புரிந்து கொள்ள முடியவில்லை. அதுபோலவே, நவீன மயமாக மாறிக் கொண்டிருக்கும் இந்த உலகிலே பிள்ளைகளை வளர்க்க எவ்வளவு பிரயாசப்பட வேண்டும் என்பதை பெற்றோர்களும் மறந்து போய்விடுகின்றார்கள். தங்கள் மனைவியின் நிலையை முற்றாக உணராத கணவனும், கணவனுடைய நிலையை முற்றாக உணராத மனைவியும், ஆளுக்கு ஆள் பல உபதேசங்களை செய்து கொள்கின்றார்கள். கருப்பொருளாவது, ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திலே, குறிப்பிட்ட சூழ்நிலையிலே ஒரு மனிதன் தான் கடந்து போகும் பாதையை நாங்கள் முற்றாக உணர்ந்து கொள்ள முடியாது. அதனால் ஒருவரை ஒருவர் நியாயந்தீர்க்க முந்திக் கொள்ளக்கூடாது. இந் நிலையைக் குறித்து விழிப்புணர்வை நாங்கள் அடையும்படி பிரகாசமுள்ள மனக் கண்களை தரும்படியாக தேவனை வேண்டிக் கொள்ள வேண்டும். முதலாவதாக மற்றவர்களுடைய உண்மையான நிலைமையை என்னால் முற்றாக புரிந்து கொள்ள, மனதார அறிந்து கொள்ள முடியவில்லை என்ற எண்ணம் எங்களுக்குள் வரவேண்டும். எல்லாக் காரியங்களும் எனக்கு தெரியும் என்று உடனுக்குடன் மறுவுத்தரவு கொடுக்காமல், கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயுமிருக்க கற்றுக் கொள்ள வேண்டும். இந்த அறிவிலே நாளுக்கு நாள் வளர வேண்டும். மற்றவ ர்களுடைய நிலைமையை உணர்ந்து கொள்ளும் உணர்வுள்ள இருதயத்தைத் தாரும் என தேவனிடம் நாம் கேட்க வேண்டும்.

**சங்கீதம் 119:169**

**உமது வசனத்தின்படியே என்னை உணர்வுள்ளவனாக்கும்.**

**ஜெபம்:** இருதயங்களை ஆராய்ந்து அறிகின்ற தேவனே, சூழ்நிலைகளை நிதானித்து அறிந்து, நான் உணர்வுள்ள இருதயத்தை கொண்டிருக்க, உம்முடைய தூய ஆவியின் வழிநடத்தலை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அன்பான வாசகர்களுக்கு!

**"உள்ளான மனிதன்"** மாதாந்த சஞ்சிகை வெளியீட்டை ஆரம் பித்து, கடந்த மாதத்துடன், **ஆறு (6) வருடங்களை**, பூர்த்தி செய்தி ருக்கின்றோம். இது தேவனுடைய ஈவு!

இந்த சஞ்சிகையிலே தரப்பட்டுள்ள, புதிய நாளுக்குள் அனுதின தியானக் குறிப்புக்கள், **ஒலிப்பதிவு செய்யப்பட்டு**, எங்கள் இணைத் தளத்தில் பதிவேற்றப்பட்டிருக்கின்றது என்பதை உங்களுக்கு அறி யத் தருகின்றோம். தியானக் குறிப்புக்களின் **ஒலிப்பதிவை கேட்ப தற்கு,** எங்கள் இணையத்தளத்தில், தியானப் பக்கத்தை (DAILY DEVOTIONS) தெரிவு செய்யுங்கள்.

உள்ளான மனிதன் சஞ்சிகை **இலங்கையிலும்** புத்தக வடிவிலே அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. மேலும், **அமெரி க்கா, ஐரோப்பியா, அவுஸ்ரேலியா** கண்டங்களிலுமுள்ள நாடுகளி லும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. உங்கள் உறவினர் நண்ப ர்கள் அதை பெற்றுக் கொள்ள விரும்பினால், அவர்களின் முகவ ரியை மின்-அஞ்சல் ஊடாகவோ, அல்லது தொலைபேசி ஊடா கவோ எங்களுக்குத் தெரியப்படுத்தலாம். அல்லது இந்தப் புத்தகத் தின் கடைசிப் பக்கத்திலுள்ள விண்ணப்பப் படிவத்தில் உங்கள் விப ரங்களை பதிவுசெய்து, எங்கள் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

அனுதின தியானத்தை, **whatsapp, Viber** வாயிலாக பெற்றுக் கொள்ள விரும்பினால், உங்கள் கைதொலைபேசி இலக்கத்தை எங் கள் சபையின் மின் அஞ்சல் வழியாகவோ (info@gtachurch.ca) அல்லது சபையின் தொலைபேசி வாயிலாகவோ எங்களுக்கு தெரியப்ப டுத்துங்கள். மேலும், **FACEBOOK** வாயிலாகவும் தியா னக் குறிப்புக்களை வாசிக்கலாம்.

சகலமும் படைத்த சர்வ வல்லமையுள்ள தேவனின் ஜீவ வார்த் தைகளை அனுதினமும் வாசித்து தியானியுங்கள். தேவனை அறி கின்ற அறிவிலே வளருங்கள்! உங்களைக் குறித்ததான பிதாவா கிய தேவனின் சித்தத்தை இந்த பூமியிலே நிறைவேற்றுங்கள்! நித்திய இன்ப வாழ்வை பரலோகில் பெற்றுக் கொள்ளுங்கள்.

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

gtachurch.ca

உள்ளான மனிதன் மாதாந்த **இலவச** பிரதி

# விண்ணப்பப் படிவம்

**முழுப் பெயர் FULL NAME:**

| |
|---|
| |
| |

**முகவரி ADDRESS:**

| |
|---|
| |
| |

**நகரம் CITY:** ______

**மாநிலம் PROVINCE:** ______

**தபால் குறியீடு POSTAL CODE:** ☐☐☐☐☐☐

**whatsApp** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன் ☐

**Viber** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன் ☐

(**whatsApp Viber** வாயிலாக பெற விரும்பினால் உங்கள் கை தொலைபேசி இலக்கத்தைக் கீழே குறிப்பிடவும்)

**தொலைபேசி TELEPHONE:** ______

**மின் அஞ்சல் E-MAIL:** ______

**விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

**THE INNER MAN – GTAC**
**7700 MARKHAM ROAD**
**P. O. BOX 3052**
**MARKHAM, ON L3S 4T1**

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE MENTIONED ADDRESS

gtachurch.ca

gtachurch.ca

210 Silver Star Blvd., Unit 807, Scarborough, ON M1V 5J9
www.gtachurchnet.ca ☎ 416.613.2909